உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசாம்பாயபரப்பிரம்ஹணேநம:.

# சித்தாந்தரத்நாகரம்.

## உத்தமவாததூலவாதூலம்.

இஃது,

சித்தாந்தத்தலைவர்க்குத்

தொண்டுபூண்டொழுகும்

சூளை,

சோமசுந்தரநாயகரவர்களால்

இயற்றப்பட்டது.

**MADRAS:**

PRINTED BY T. GOVINDACHARIAR,

SIVANANDA NILAYUM PRESS,

No, 28, Avadanum Papier Street, Choolay.

**30th November 1881.**

**Registered Copy-Right.**

உ

சிவமயம்.

# உத்தமவாததூலவாதூலம்.

## அதிகாரவட்டவணை.


| (பக்கம்.) | | (பாடற்றொகை.) |
|---|---|---|
| க | காப்பு | உ |
| ,, | பாயிரம் | கக |
| ங | சிறப்புப்பாயிரஞ் சீரழிந்தொழிந்தது | உகூ |
| சு | புலமைவிளக்கம் போந்துரைசெய்தது | எரு |
| ௰ரு | நிந்தாஸ்துதி | கூ |
| ௰சு | மாட்சிதிருபய மதமஸத்தென்றது | ருஉ |
| உஉ | வைணவமினைத்தெனும் வண்மையுரைத்தது | க௦ |
| உச | சத்திமார்க்கஞ் சைவமேயென்றது | ரு |
| ,, | பிரமஸமாஜப் பேரோதென்றது | உ |
| உரு | காலமினைத்தெனக் கழறப்போந்தது | ங |
| ,, | சூனியவாத சொருபமுரைத்தது | உ |
| ,, | மாயாவாத மாண்பொருளுரைத்தது | க௦ |
| உஎ | நாத்திகமிதுவென நாட்டப்போந்தது | உ |
| ,, | ஆத்திகஞ்சைவ மாமெனவுரைத்தது | சு |
| உஅ | போலிஞானத் தன்மைபுகன்றது | க௦ |
| உகூ | அடாஞானத்தின் றன்மையறைந்தது | சு |
| ங௰ | கல்வியாதார விளக்கங்கண்டது | ங |
| ,, | வத்துநிலைமை வகுத்துரைசெய்தது | கஎ |
| ஙங | தத்துவவிளக்கஞ் சாற்றப்போந்தது | ச |
| ,, | அத்துவிதத்தி னரும்பொருளுரைத்தது | கஎ |
| ஙரு | நாட்டபேதவிளக்க நவின்றது | எ |
| ஙசு | சுகநிலை | சு |
| ஙஎ | இந்துவேத மேதெனமறுத்தது | உச |
| ச௰ | சைவசித்தாந்தஞ் சாற்றிமகிழ்ந்தது | சுஉ |
| | | ஙஎச |

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஸம்பந்ததீர்த்தசரணாயநம:

# சித்தாந்தரத்நாகரம்.

## உத்தமவாததூலவாதூலம்.

### காப்பு.

உத்தமவா தம்புகனூ லோடுமே யுத்தமர்தம்
பத்திமையுங் கூடிப் பலிக்குமே—சித்திமுத்தி
யெல்லாஞ்சி வோகஙிலை யெய்துமே யிப்போதே
பொல்லா ரிணைமலரைப் போற்று. (க)

சண்பையர்கோன் வாகீசர் தம்பிரான் றோழர்சிவ
னுண்மைதரும் வாதவூ ருத்தமரும்—அண்மைசெறி
சந்தான மெய்க்குரவர் சாரவே பாடியத்தைத்
தந்தாரு மெங்க டலை. (உ)

### பாயிரம்.

சீர்மல்கு காழிவளர் செம்மலார் பொன்னருளுக்
கார்வம் பெருகிடவே யன்புசெயு—மோர்சைவர்
தம்மை யடைந்தொருவன் றர்க்கத்தால் வெல்லுவனுஞ்
சம்மதமே தென்றான் றகைந்து. (க)

இவ்வுரைகேட் டார்காணீ யேதுகொலோ நின்சமயஞ்
செவ்விதினிங் கென்முன்னே செப்புவாய்—தெவ்வுரையா
யென்றபொழு தென்னிற் பிறிதில்லை யான்பிரம
மென்மதம்வே தாந்தமென்றா னேய்ந்து. (உ)

அம்மொழியாற் புன்னகையுற் றானு னுனக்கெது நா
லெம்முனுரை யென்றானை யெள்ளியே—சம்மதமாம்

உத்தமவா தம்புகனா லென்றா னுரையென்றா
றுத்திகொளச் சொன்னா னுவந்து. (௩)

இந்தநூற் காசிரிய ரெவ்விடத்தா ரேதுமுதல்
வந்தநூல் சொல்ல வழக்கென்றா—ரிந்தநூல்
தானாகு மேட்டிற் றனைக்கண்ட தாதலினா
லென்முதனா லென்றா னிசைந்து. (௪)

அன்னியவேட் டைப்பழிப்பை யாதலினா லுன்னேட்டை
நன்னிதியாக் கொண்டிடுவ னாடியே—சொன்னமுறை
நன்றானாற் சற்றே நவில்கண்டா யென்றிடலு
நின்றோதி னான்முன்னே நேர்ந்து. (௫)

முறையேயா வுங்கேட்டு முன்னிற்போய் நீதான்
முறையேயெஞ் சைவமுதன் முற்றும்—அறைகூவி
யெல்லா மதமுமழிந் தேகச்செய் தேனென்ற
சொல்லேது காணென்றார் சூழ்ந்து. (௬)

சைவசித்தாந் தப்பெருநூ றான்பார்த்த துண்டோநீ
சைவனைவ னோடு சயம்பெற்றாய்—சைவரவைக்
கண்ணே யடைவாயோ கண்கலங்கா தந்தோநின்
கண்ணே யிரங்குவம்யாங் காண். (௭)

நின்கூற் றிரிய நிகமாக மப்படியே
யென்கூற் றிசைக்கின்றே னேற்றிடா—யென்கூற்றின்
மேலில்லை யென்றெழுவாய் மேல்வருமே கூற்றுன்பால்
சீலமிது வென்றார் செறிந்து. (௮)

கூற்றுனக்குத் தெய்வங் குடிகொண்ட தோர்ந்திலையக்
கூற்றுக்குக் கூற்றெங்கள் கோமான்காண்—கூற்றெங்கள்
குற்றேவல் செய்திடவே கும்பிட் டிறைஞ்சிநிற்கு
மெற்றோமேல் கூற்றென்றா ரேய்ந்து. (௯)

உத்தமவா தந்தன்னை யோட்டெடுக்கச் செய்குவிரோ
லுத்தமமா நும்போத மொப்புண்டோ—வுத்தமமே
யாகுங் கருணையினா லாட்கொள்ள வந்தவரொன்
றாசிப்பே னென்றா னுவந்து. (௰)

என்றலுமன் னோனை யிருவென் றமர்த்தியரு
கொன்று மறிஞ ருவந்தேத்த—நன்றிதுவென்
றாங்கே யெடுத்தநுவா தஞ்செய் தகற்றினரால்
தீங்காரு மந்நூ றெற. (௰௧)

## நூல்.

(சிறப்புப்பாயிரஞ் சீரழிந்தொழிந்தது.)

சத்த னுடன்சத்தி சார்ந்ததனு லாநந்த
வத்திமுகன் றன்மை யறைந்திடுதல்—சத்தியமே
யாயி னுனக்கென்னு மாபாசப் பெட்டகமே
பேயனே வாழ்த்திலையேற் பின். (௧)

அறிவின் ஸ்புரிப்பதுவே யாக மதங்க
ளறிவிலா தென்னோ வறைந்தா—யறிவா
மதுவேன் ஸ்புரித்த தழித்தா யறிவை
மதியாய்கன் மத்தான் மதம். (௨)

நின்மதமுங் கன்மத்தா னோர்ந்த தறியகிலாத்
துன்மதியே சொல்விடாய் சுத்தவறி—வென்ன
வறியாமை துக்கத் தலமருமென் றோதல்
வெறியோகே ளாயுன் விதி. (௩)

நானென் றிடமில்லே னுன்கும் பிடலெங்கே
தானென் றுரைக்குந் தரமிலா—யூனென்றி
யென்னோ புலம்ப லெவர்கேட்க வேறின்றேல்
பின்னோர் பொருளுண்டாய்ப் பேசு. (௪)

ஒன்று பலவானு லொன்றுமோ வொன்றென்ன
லன்றி யவையொன்று மாகுமோ—வொன்றென்ன
லொன்றே பலவாகா தொன்றாகா வப்பலவு
மொன்றுபல வாதலறிந் தோது. (௫)

ஒன்றே யிரண்டா யுடைந்து குருசீட
ரொன்றே யுணர்த்தியுமேற் றிட்டுமே—நின்றவகை
சொல்லியவர் நின்குருவு நீயுமெனச் சொன்னாயே
சில்விமதி யாய்மாறென் செப்பு. (௬)

ஒருபொருளே தோருயிரே தோ துவதென் மற்றை
யொருவர்முறை யேநீநா னென்றுற்—றொருபொருளின்
வேறா வவரின்றே லென்னே விவிதமுறல்
கூறா தடக்குதிநின் கோள். (௭)

கற்றவர்கல் லாராக் கலங்கல் பிரமத்துக்
குற்றுரைத்தாய் பேதையே யுண்மைதனைக்—கற்றுணரா

தென்னே பிதற்றுகின்றா யென்றும் பணிசெய்வோ
முன்னோர் பலர்க்கு முனைந்து. (௮)

ஒன்றே ஸமஸ்தமுமென் றோதும் பெரியோர்க
ளன்றே யுரைத்திடுவர் நாடியே—நின்றே
கலந்தா டுயிருலகிற் காணாபதி நாட்டத்
துலந்தாய்கா ணாயுண்மை யே. (௯)

ஞான மெனுஞ்சொல்லை நாடுகின்றாய் சொந்தமதாய்
ஞானமிலா வஞ்ஞான நாதனே—ஞானம்
சரியை முதன்மூன்றுந் தாண்டியன்றோ நிற்கேன்
பெரியர்சொலு மேதக்க பேச்சு. (௰)

எம்மதத்தி னோரு மிசைப்பரோ ஞானியெனத்
தம்மையவர் போலன்றோ தம்மறியாக்—கைம்மைசெறி
மூட மதத்தின் முடங்கிக் கிடந்துழலும்
பாடன்றோ நீசொல்லும் பண்பு. (௰௧)

ஆத்தி மிகவைத்தா னன்றடிமை கொண்டகுரு
ஏத்த வெனக்கூறு மேழையே—ஆத்தியுளோ
ரெம்மதத்து முண்டென்னே வேற்றந்தா னின்னுரையில்
பொய்ம்மதத்தாய் சீசீநின் பொங்கு. (௰௨)

உத்தமத்தை வாதமென லொக்குமோ கற்றறியாப்
பித்தவுனக் காரிதனைப் பேசினார்—முற்று
மதமர் தமக்கதிக மாமென் றறிந்தே
மதியிலா யென்னோநின் மாண்பு. (௰௩)

பேதையே நின்றனக்குப் பேதங் கழற்றவரும்
போதகுரு சொன்ன புதுமையிதோ—மாதவஞ்சேர்
நல்லார்பொல் லாரோடு நாய்போல் விழுந்தரற்றி
மல்லாடி நிற்ப மதத்து. (௰௪)

நவநவமா யாபாச நல்கிடுமே நின்னா
லவமேவக் கூறி யழுநூல்—தவமேது
மில்லா யநுபவநூ லென்றா யிழவுநூ
லல்லான்மற் றில்லை யறி. (௰௫)

தன்னேட்டிற் கண்டதனாற் றன்னொப்பி வில்லையெனப்
பின்னேட்டிற் பேதம் பிரித்தனையே—தன்னேட்டி
லன்னியமா வேட்டி லமர்ந்த பரிபாஷை
யுன்னுவையிங் கென்னே வுரை. (௰௬)

அன்னியரு நீயன்றி யாவதெவ னின்மதத்தி
லன்னியவேட் டைக்கட்டிக் கொண்டலைவா—யன்னியனை
வைதா யறியாமல் வையப்பட் டாய்நீயே
செய்தாயென் னேவீண் செயல். (௧௭)

வத்துவின்சித் தாந்த வகைதெரியாத் துன்மதநீ
கத்துமா யாவாதக் கட்டென்றார்—வத்துநிலை
யாய்ந்து பருகி யநுபவத்தி னின்றுபவ
மாய்ந்தபெரி யோருண் மதித்து. (௧௮)

வேதாந்த சித்தாந்த வேற்றுமையின் றுதலினால்
வேதாந்த மேயுண்மை மேவிடுமால்—வேதாந்தங்
கண்டறியாய் சித்தாந்தக் கண்பெற்ற பேர்க்கன்றோ
வுண்டெனுநன் முத்திமறை யோர். (௧௯)

சிவோக மெனல்சைவ சித்தாந்தர்க் கேயாஞ்
சிவோகமெனச் செப்பினாய் சீசீ—சிவோகமதைப்
பாவிக்க வேதம் பகருங் கருடோகம்
பாவிக்கச் சொன்ன படி. (௨௰)

பசுபதிபா சத்தின் பகுப்பென்னே கொண்டா
யிசையுமோ நின்மதத்தி லென்றும்—பசையறுதுர்ப்
புத்தியினாய் நாளும் புகல்வர் பரிபாஷை
சுத்தியமாய்ச் சைவரவர் தாம். (௨௧)

பொய்யென்று முன்னே புகன்றவற்றை மெய்யென்று
பைய வுரைத்துப்பின் பாரறிய—மெய்யேநா
னென்றாற் பரியாச மேனுண்டா காதையோ
நன்றாம்வே தாந்த நக. (௨௨)

பொய்யேமெய் யாகுங்காற் பொய்யனா நீயுமுனை
மெய்யென்னக் கூறவிவண் மேவலால்—பொய்யுரையே
பேசுவதா லன்றோ பெரியோர் புகன்றிடுவா
ரேசிமா யாவாதி யென்று. (௨௩)

ஞாயமய நின்மதமா நாடினா யஞ்ஞாயந்
தோயுமத மென்னத் தொகுப்பரோ—ஞாயமயஞ்
சைவ மெனக்கொண்டே சார்ந்தென்று ஞேயத்தி
லுய்வகைதேர்ந் துற்றபெரி யோர். (௨௪)

பண்டு வியாதன் பகர்வேத சூத்திரத்தைக்
கண்டறியாய் சீகண்டர் கண்டுரைத்தா—ரண்டர்தொழும்

பாடியமா வன்னதனைப் பாராதே ஞேவலைவாய்
கேடிரியுஞ் சார்ந்ததனைக் கேள். (உரு)

தேவநிந்தை யல்லவெனச் செப்பினுய் நின்னூலைத்
தேவநிந்தை யிற்பழுத்த தீயோனே—தேவநிந்தை
யல்லவென்று நீயோ வறைவாய் பலபேருஞ்
சொல்லுவர்கா ணிப்படியே சோர்ந்து. (உசா)

அன்னிய மதத்துண்மை யாய்ந்துதெளிந் தார்போன்று
பன்னுதியே தோடம் பலவாக—வின்னுமுணக்
கேஞேநற் பாகம்வா வில்லை மலவுறைப்பிங்
கானுலென் செய்வா யடர்ந்து. (உஎ)

சமதமங்க ளொஞ்ஞான்றுஞ் சாராது வைகுந்
திமிரம்விடாப் புல்லரோ சேர்வ—ரமையவுன்ற
னூத்தைவா யாற்பொங்கு முத்தமவா தத்தையினி
யேத்துவரார் தூற்று தெரிந்து. (உஅ)

இனத்தை யினம்போற்று மென்னுமா போலுன்
னினத்தவரை யேத்தலுனக் கேற்கு—மினத்தவரா
மன்னேரொஞ் சைவ வடிகண்முன் னென்னுவர்
சொன்னேனற் போதந் தொடர்ந்து. (உகூ)

(புலமைவிளக்கம் போந்துணாசெய்தது.)

மதங்களெலா மாய்த்திடவே மாவிரதம்பூண்டு
மதங்கொண்ட நின்னையே மாய்ப்பேஞ்—சிதம்பரத்தி
லையன் திருவருளா லாண்மையுண்டேல் வாவாநின்
பொய்யுரைக்க முன்னே புகுந்து. (க)

புலமையிலா நீயோ புலமைத் தலைமை
யலகைபோன் றென்முன் னறைவாய்—நிலமையிலாக்
கைம்மையாய் தன்னை யறிதல் கருதென்ருய்
மெய்ம்மையொன்றுங் காணுது மேல். (உ)

தன்னை யறித றருமா மறைப்படியே
யுன்னை யழைத்தவரா ரோதவே—தன்னையுயர்
*தேகமா யிந்தியமாய்த் தேர்வார் பிராணனுமா
யூகமிலார் வேதத்தை யோர்ந்து. (ங)

* ஈண்டுக் காணமே பொருளென்பாரையுங் கூட்டிக்கொள்க.

நீயோ மலமறைப்பி னின்றழியு மான்மாவை
வாயோவா தென்றும் வதறியே—பேய்போலக்
கத்துவைமே லொன்றில்லாக் காரணமென் றென்னேநின்
பித்துரையிங் கார்கொள்வார் பேசு. (சு)

ஆன்மாவை யுண்டென்றே யங்கீ கரித்தோமா
லான்மா மலத்தினதென் றுய்ந்திட்டே—யான்மாவைப்
பற்று மலங்கழியப் பார்த்தருளும் பண்ணவனைப்
பற்றுவங்காண் மாய்ந்திடவெம் பற்று. (ரு)

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கென்றே—சொற்றார்க்
கெழுமன்பி லாயுன்ற னேழைமையைச் சுட்டே
கழுவுவா யுள்ள களம். (சா)

ஏனோ விபரீத முற்றெழுவா யெந்துணையா
மானேறும் பாகனார்க் கன்பற்றே—யூனேறுஞ்
சொன்னேன் சுருதிபல சொன்முறைதேர்ந் துன்னோடு
பன்னேன்வீண் பாடம் படித்து. (எ)

பாசத்தைக் கண்டும் பசுவையே தான்கண்டும்
பேசுவதை யாங்கொள்ளேம் பேதையே—ஈசன்
உடையா னெனக்கண் டுருகிப் பணிவோம்
கடையரைப்போற் கண்கலங்கா மல். (அ)

எல்லா மவனடிமை யென்றிசைத்து மெல்லாமும்
வல்லா னவனுடைமை வந்தித்து—மெல்லா
மவன்செயலே யென்றுரைத்து மான்றோ ரணர்ந்தார்
சிவன்செயலென் றெல்லாந் தெளி. (கூ)

தன்னைச் சிவமென்னத் தானறித நீதாமல்
தன்னைச் சிவனடிமை தானென்றே—தன்னை
யறிவா ரறிவ ரறியாதாய் வேண்டாம்
பிறிதுரைகாட் டாதடக்குன் பிச்சு. (ய)

முறையேஞா னங்கண் முடித்திடுவோ மூன்று
விறையேனும் புத்தியிலா யேற்பாய்—சிறைமேவும்
பாசமா ஞானம் பகரும் பசுஞான
மீசஞா னத்தோ டிசைந்து. (யக)

தம்மை யுணர்ந்து தமையுடையான் றன்னுணர்வா
ரெம்மை யுடைமை யெமையிகழார்—செம்மையினு

றென்றவுரை கேளா விருகாற் பசுவேநீ
வென்றனையோ வெம்மவரை மேல். (௰உ)

ஆட்சேப மில்லா மதமில்லை யென்றறைந்தா
யாட்சேபஞ் செய்திடுவா ரன்னியரென்—றாட்சேபங்
கொண்டா யறிந்திலையுன் கோதார் சமயத்தைக்
கண்டார் நகைத்திடுவர் காண். (௰௩)

தன்னை மலமறைத்த றானன்றோ பந்தமது
தன்னை யருள்கொண்டு தானொழித்தல்—பின்னையுயர்
முத்தி யிவையறியாய் முன்பின்னிங் கேன்முரணுஞ்
சத்தியிலாய் கண்டிடவே தான். (௰௪)

உன்சித்தாந் தப்படியே யொன்றே பொருளானுன்
மன்னுவதென் பந்தமுத்தி வாய்த்திலதே—னின்னுரையிங்
காருக் கெதன்பொருட்டா வாய்ந்துரைசெய் வாயந்தோ
பாருக்குண் ஞானியெனப் பாழ்த்து. (௰௫)

உம்மைவிட வேறில்லை யுத்தமர்கா ளென்றுரைத்தாங்
கெம்மையிக லாதுணர்மி னென்றதெவன்—செம்மைகொளு
மெல்லா மவரானு லேனிகழ்வா ருன்னையவர்
பல்லாராய் நின்றதென்ன பண்பு. (௰௬)

விடயந் தெரிந்தவர்போன் மெல்லசில கற்று
விடையளிக்க மாட்டாது வெம்பி—விடையளிக்க
வல்லே னெனச்சொல் வளர்த்தாய் பயனென்னுஞ்
செல்லாதெம் மாட்டுன் செருக்கு. (௰௭)

பதிசோ தனையிற் பறக்குமே நின்பாழ்
மதிமோன ஞானத்தின் மாண்பே—துதிமேவுஞ்
சைவநிலை யேனோ சரிந்திடுநின் னற்பநிலை
கைவருமேல் வந்தென்முன் காட்டு. (௰௮)

பிரமமெங்கே ஞானமாம் பித்தெங்கே நின்சொல்
துரமெங்கே வந்திவணெற் கோதாய்—பிரமத்
தொருமுதலா நீசெத் தொழியுங்கா லன்றித்
தெருடீர் சுழுத்தியிலுஞ் செப்பு. (௰௯)

ஏனோ பிரம மிறக்கும் பிறந்துழலு
மேனோ வவத்தைபல வெய்தியிடு—மேனோதான்
வீண்சாலம் பேசியே வெம்பினாய் மேலுண்மை
காணாதுன் வீண்கதையைக் கட்டு. (உ௰)

மதிதோன்றி யேமாயு மாணிடத்தைக் கேட்டாய்
மதியாவ தேதெதற்கு மாண்ட—மதியில்லாய்
நீயன்றி யில்லையென்றாய் நேடுவதென் பின்மதியைப்
பேயுரையாய் போயிற்றுன் பேச்சு. (௨௧)

பேத மபேதமுடன் பேதாபே தங்கூறும்
வாதமல வெங்கள் வளர்சைவம்—பேதையே
"அத்துவித மாத லருமறைக ளொன்றென்று
தத்துவித மென்றறையு மாங்கு." (௨௨)

சச்சிதா நந்தமதேன் சாரும் பலவுடலைச்
சச்சிதா நந்தமெனிற் சார்ந்திடுமோ—பிச்சுடையாய்
துக்கஞ் சுகமிரண்டுந் தொந்தனையிற் பட்டுழலு
மிக்கபசு வென்றறிவாய் மேல். (௨௩)

தானே பொருளானாற் றன்னுண்மை யென்கெடுநீ
யேனோ பெருந்துக்க மெய்துவாய்—தானேன்
நழுவுங்கண் டாய்வேறு நாடவய லுண்டோ
பழுதுரைத்தாய் நேரும் பவம். (௨௪)

சீவே சனையறிதல் சிவனே யாயிடினுஞ்
சீவன்றா னேயறியான் சேர்ந்தன்றி—சேவேறி
பாத மறியாப் பசுவே யறிவிப்பான்
மாதுமையாள் பாகன் மகிழ்ந்து. (௨௫)

உபாதியல வீச னுடலருளா மேனி
யுபாதிமல மாயையுனக் கொன்று—முபாதி
கழிப்பா னவன்மோக்கங் காணுதியால் வேறு
பழிப்பா முரைத்திடினீ பார். (௨௬)

ஞெப்தி யெல்லாமென்னி லேஞேதா னஞ்ஞெப்தி
ஞெப்தியலா தொழியு ஞேயமாஞ்—சப்தநிலை
மேவுஞ் சுகப்பொருளை மேவியன்றே ஞெப்திவருந்
தாவின் ஞாதாவுக்குத் தான். (௨௭)

ஞாதாவு ஞானமுடன் ஞேயமுமெய்ந் நாட்டமுறு
போதோர் பொருளாமோ போந்துரையாய்—தீதாரு
ஞானம்பே சித்திரிவாய் ஞாதா நழுவியதால்
மோனம் பிறங்கு முடிந்து. (௨௮)

சித்துச் சடவழக்கைச் சிக்கறுத்த லென்றதெவன்
சித்துச் சித்தேயாகுஞ் சேர்ந்திடுமோ—சித்தே

ஜடமா யதுதானுஞ் சாருமோ சித்தாக்
கடஞாய பண்டிதனே காட்டு. (௨௯)

யாமா ருடலா ரிருமையுமிங் கொத்துறவே
தாமாச் சமையுந் தாமுளதோ—கோமானை
நாடா தொன்றாக நவில்வாய் நகைகண்டாய்
கோடா துரைத்தருளைக் கூடு. (௩௰)

அசத்தா முடலெங்கே யாச்சுதெவர் செய்தா
ரசத்தா மத்தையேனிங் காக்கல்—அசத்தேயின்
றாரோ விசாரிப்பா ராரோ தெரிவிப்பார்
பாரோர் மதிக்கப் பரிந்து. (௩௧)

நரகிற் படிந்திடுத னன்றேவென் றாயந்
நரகுநீ யன்றியிலை நாடில்—நரகத்திற்
றேயுமதாற் சொன்னேன் சுகமுண்டோ நின்மதத்திற்
காயுமதா லென்வருநீ காண். (௩௨)

நரகி லுறைவாரு மந்நரகு நீயே
விரகமேற் கொண்டிடுவாய் வீணே—நரகில்லை
யீங்கென் றனக்கென்னி லேனில்லா மற்போகும்
பாங்கார் வியாபகத்தைப் பார். (௩௩)

சுத்த மசுத்தஞ் சுகாசுகங்க ளுள்ளதில
தத்தனையுஞ் சத்தானா லந்தோநற்—சுத்த
மசுத்த மெனலாதி யாபாச மென்றே
வசுத்தனே கூறுவதிங் கார்ந்து. (௩௪)

சிந்தைசக மொன்றல்ல வென்றுநீ செப்பியபின்
சிந்தைசக மானபடிச் செப்புவதென்—சிந்தை
சகமானா லாகுஞ் சுயஞ்சோதி தேர்வாய்
அகமேவி யொன்றா யடைந்து. (௩௫)

நினைப்புமறப் பென்னு நிலையின்மை கண்டோ
வனைத்துலகு மென்னென் றறிந்தோ—கனப்புலமை
கண்டபடிப் பேசுங் கவியே புலம்புதனீ
கண்டனையோ வுன்னைமலங் கான்று. (௩௬)

தன்னையே தான்காணச் சாற்றினாய் பேதமைகாண்
டன்னையெவன் றான்காணுஞ் சாராதே—தன்னையே
தன்னிற்றான் காணுங்காற் றானேன்கா ணாதுன்கண்
டன்னிறாள் னென்றுந் தனித்து. (௩௭)

அறிவேயெல் லாமாகு மாயினீ யேனோ
வறிவிப்ப தெல்லா மதுவாக்—குறியாக
வேறுனார்க் கந்தோ விளம்புவாய் பித்தனக்கு
மாறுதோ வீதுன் மலம். (௩௮)

மதங்களிலே யொன்றாக வாய்த்திலதோ நின்புன்
மதமாத் திரமென்னே மாட்சி—மதங்களிலே
கேடுண்ட துன்மதமாக் கேட்டதிலை யோநீதா
னுடுமா யாவாத நன்கு. (௩௯)

எம்மண் டலத்தோரு மீனமென வேதள்ளிக்
கைம்மைசெறி நின்மதத்தைக் கைவிட்டார்—பொய்ம்மைசெறி
யம்மதத்தி லந்தோ வழிகின்று யாகெடுவாய்
சம்மதமோ வேதத் தவர்க்கு, (௪௰)

அறிவை யறிவளக்க லாகுமோ பித்தா
வெறிகொண்ட சொல்லை யெவர்மேலாக்—குறிகொள்வர்
தீபமோ தீபத்தைத் தேடுந் தியங்குமுனைச்
சாபத்தாற் காய்ந்தவரார் தான். (௪௧)

அகமென்ப தெந்தவக மென்றே யகங்கொண்
டகம்பிரமங் கூறினை யந்தோ—சுகமில்லா
வெந்தவக மென்றாலென் னேற்குமோ மாய்ந்தகமே
யெந்தை யடிக்கீழடங்க வேத்து. (௪௨)

பாசமக மல்ல பசுவே யகங்கண்டா
யீச னகமல்ல வென்றறிந்தே—யீச
னகத்தையே பாவித் தகற்றாய் சீவோக
மகம்பாவ மாமதுவு மற்று. (௪௩)

பொருளல்ல வற்றைப் பொருளென்று கோடல்
மருளனே நின்றனக்கே வாய்க்கும்—தெருளின்றி
யந்தோ தமிழ்வேத மாயாய் விபரீதஞ்
சிந்தா துரைத்திடுவாய் சேர்ந்து. (௪௪)

எல்லா மெமக்குவரு மென்றே மதம்பேசிச்
சல்லாபங் கொண்டாய் தவமில்லாய்—நில்லாயென்
முன்னே யொருசொல்லை முன்னிட்டு மூலையிலேன்
பன்னாய் கம்பீரம் படித்து. (௪௫)

தன்வலிவுந் தன்னிளைப்புந் தாம்வந் ததைச்சொல்லா
யன்னியத்தை யுங்கூட வாண்டிடுவாய்—சின்னமதி

யாயுன்போ தத்தையிவ ணூரோ மதித்திடுவர்
சேயுன் செருக்கடங்கித் தேர். (௪௬)

உடனமக்கிய் கன்னியமென் றோர்ந்த படியே
படர்க்கை யெனக்கண்டே பானே—யுடற்குயிர்க்குத்
தாரக மென்றுள்ளே தரித்து வியாபகத்தாற்
காரகத்தை நீக்குண்மை கண்டு. (௪௭)

தலைவ னருளன்றித் தன்னை யறியு
நிலையுண்டோ வந்தென்முன் னின்றே—யலையாமல்
சொல்லுவையோ வேட்டைச் சமந்தே பலநாளுஞ்
சொல்லுவையே பாடந் தொடர்ந்து. (௪௮)

தேகி மலந்தன்னிற் சிக்குண்டு தேகமா
யேகன் சிவனை யிழந்ததலல்—சோகமுறுங்
கண்டாய் சிவனன்றிக் கட்டவிழா தென்மதியோ
கண்டாய்போற் பேசுவைநீ காண் (௪௯)

இலக்கணமுந் தர்க்கமுங்கற் றென்னுதவியென்று
யிலக்கியமாஞ் சம்புவையென் றென்றும்—கலக்கமறக்
கண்டுதருக் கத்தாற் கடிதேகச் செய்வோங்காண்
பண்டைவினை யாவும் பறந்து. (௫௰)

சொன்னதையே சொல்லித் துடிக்கின்றாய் நின்புலமை
யென்ன வதிசயங்கா ணிப்படிமுன்—சொன்னவரைக்
கண்டறியே நின்மடமை கண்டே மிதுவென்னே
மண்டிவருந் தற்கவியின் மாண்பு. (௫௧)

அலைநீர்மோ லேயறிவி லாமெல்லா மென்று
யலைநீரு மொன்றே யறிவா—மிலையேதா
னப்படிநீ சொல்லு மறிவும் பிறவுமிதற்
கெப்படியோ வந்திங் கிசை. (௫௨)

நான்றென்ற நீதான் றளையிற் படுவானேன்
மூன்றவத்தை யேனோதான் முந்தியிடுந்—தான்றோன்றித்
தம்பிரா னென்னத் தலைப்பட்டாய் நின்னகந்தை
யெம்பிரான் றன்னை யிகழ்ந்து. (௫௩)

சிறையுடலிற் பட்டநீ தீர்க்கும்வகை யெண்ணி
னிறைஞானத் தாலென்றாய் நீதான்—சிறையுடலிற்
பட்டுன் றனைமறந்த பாழிலே ஞானமெவன்
கிட்டும்வந் துய்யவே சொக்கு. (௫௪)

நினைவோ வுலகமிது நின்போதங் காணின்
னினைவும் பிறவுமரு ணேருந்—தனைநிகரின்
மாயையென வன்றோ மதிப்பர் மதிவல்லோ
ராயுமறை யாகமத்தை யாய்ந்து. (௫௫)

நினைவென் றொருமுதறா னிற்குமோ வான்மா
தனைவிட் டதுவுமான் றானே—கனவிருளைப்
போக்குவான் றந்த புதுமையெனக் காணகிலாய்
சூக்குமமீ துள்ளே துணி. (௫௬)

அறிவற்ப மென்றுரைத்த லாகாதென் றாய்நிற்
கறியாமை யேனிங் கறைந்தா---யறிவற்ப
மாகுங்காண் பேரறிவா மற்புதனைச் சேராக்கால்
போகுங்கா ணுற்ற புகழ். (௫௭)

ஆண்டா னடிமைநிலை யாழத்தை நீயறிதல்
வேண்டா மிதுஜால வித்தைகாண்—காண்டோறு
மென்னே நகைக்கின்றா ரெம்மனோர் நின்மருளைக்
கொன்னே யழகிதெனக் கொண்டு. (௫௮)

வாயில்காப் போன்சென்று மன்னன் றனிச்செங்கோ
லாயுமா போலன்றோ வாமுன்றன்—பேய்ச்செய்கை
கொள்ளற் குரித்தோ குணமென்றோ நின்சொல்லாற்
றெள்ளுமதி யில்லாய் தெளி. (௫௯)

ஆண்டானு மில்லை யடிமையுமிங் கில்லையுன்றன்
றீண்டா மதத்திற் சிலுகுடையா—யாண்டா
னிலையாத லாற்றெய்வ மில்லை யடிமை
யிலையாத லானீயு மில். (௬௰)

இல்லாமை யாலென்று மெய்துங்கா ணுத்திகநின்
பொல்லா மதந்தன்னிற் புந்தியிலாய்—நில்லாயென்
முன்வாதஞ் செய்ய முடியுமோ வுன்றனக்கிங்
கென்வாதம் வீண்பிரளி யேன். (௬௧)

மதம்பற்றி யேநாளும் வாய்மதங்கள் பேசி
மதமில்லை யென்றாய்நின் மாயம்—மதமின்றே
லேனோவீண் வாத மெவர்பா லதைநாட்டற்
கேனோவிம் மூட மியம்பு. (௬௨)

நின்பொய்ம் மதத்தை நிறுவுவர்காண் மெய்யறிஞர்
துன்மார்க்க மென்னத் துணிந்தேதான்—சன்மார்க்க

மல்லா வதனை யதீதமென்று யாகெடுவாய்
நில்லாதுன் போத நிலைத்து. (௬௩)

ஆன்மா வளவை யளக்குங்கா லன்னதுதா
னூனுதி யாகுமோ வுற்றுணரின்—ஞானுதி
சத்தி யபின்னமதாய்ச் சார்ந்து மலமறைப்பிற்
பித்துடையாய் தோய்ந்துறுநீ பேண். (௬௪)

உடலல்ல வான்மா வுறுமிந் திரிய
மடர்பிரா ணன்கரண மல்ல—ஜடமல்ல
சித்தல்ல கேவலமாச் செப்புவதுந் தானல்ல
சித்தசித்தென் றுள்ளே தெளி. (௬௫)

அவனன்றி யேது மசையாதென் றுனின்
னவதிகாண் கொண்டாய்வீ ணர்த்த—மவனென்று
மேதுமசை யாதென்று மேன்பிரித்தா ருண்மைநிலை
மாதவத்தோர் நன்கு மகிழ்ந்து. (௬௬)

இரண்டிற்ற தாலேநீ யேகமாம் பூசை
யுரம்பெற்ற தென்றுரைத்தா யோகா—விரண்டற்ற
வத்துவித மாம்பூசை யாகுங்காண் யாஞ்செய்த
லத்துவிதத் துண்மையறி யாய். (௬௭)

பெருவாய் திறந்தாற் பிணநாற்ற முன்பால்
குருவேடத் தாரைக் குரைப்பாய்—குருவேடம்
பூண்டனையே மூடர் புகழ்ந்துரைக்க வந்தோர்நீ
வேண்டிப் பொருளை விழைந்து. (௬௮)

அறிவித்தா லன்றி யறியா வுளங்க
ளறியென் றுரைத்ததனை யாயா—வெறிமிக்க
பேயாநின் னேடிங்கே பேசினும்வீ ணுங்கண்டா
யோயாது பொய்யுரைப்பா யுற்று. (௬௯)

அன்னியர்சித் தத்தை யழிப்பே மலமாயத்
தன்னியரா மன்னோர் தவங்கண்டா—யன்னியரா
மூடர் தமக்கே முதற்குருவாய்த் தோன்றியநின்
பாடவதி சொன்னேன் படு. (௭௰)

தற்கண்டார் தற்கண்டா ரென்று சலிப்பில்லா
தற்பவுரை யேனோ வறைகின்றாய்—தற்கண்டோர்
தம்மை யுடையான்றன் றாணிழற்கீழ் வைகுவர்காண்
தம்முணர்ந்து பெற்றருளைத் தான். (௭௧)

தீர்ந்தநிலை யின்னதாச் செப்பி யெவராலுங்
கூடர்ந்தென்று மேவெல்லக் கூடாதென்—றோர்ந்துரைத்தாய்
சீசியுன் போதமிது சென்ம சுபாவங்கா
ணாசீ வகற்கன்பு ளாய். (எ௨)

உருவென்போ மன்றி யருவென்போ மோது
முருவருவ மென்போமயா மொன்றை—யுருவமுதன்
மூன்றுமதற் கில்லென்போ முன்பின் முரணுமல்
சான்றுமறை யாகமங்கள் சாற்று. (எ௩)

எல்லா மசத்தென் றிசைத்தா யதுதானும்
பொல்லாய் பரனிடத்திற் போந்திடுமோ—வில்லாப்
பொருள்கா ணசத்தெங்கள் பூரணன்காண் சத்தே
யொருநீ சதசத்தென் றோர். (எ௪)

சீவேசர் பொய்யாகச் செப்புவா யுன்மதத்திற்
சீவேச ரேன்பொய்யாந் தேர்ந்திடினிங்—காவேசங்
கொண்டாரைப் போன்றேநீ கூறுவதா லென்கண்டாய்
கண்டாயேல் வந்தென்முன் காட்டு. (எ௫)

(நிந்தாஸ்துதி.)

எல்லாஞ் சிவமென்ன வேத்துகின்றோங் காணுமெ
லெல்லாநா னென்னக்கண் டின்புற்றே—நல்லாய்நீ
போகிப்பா யொன்றினையும் போகவிடா துன்ஞான
மோகிப்பாங் கண்டாய் முதிர்ந்து. (க)

உன்வாழ்வுக் கொப்புண்டோ வோகோ வருநரகின்
மன்னுவாய் நீயன்றே மாமோக்கந்—தன்னிலுமே
பூரணத்தா லந்தோ புகுகின்றா யாரோநின்
சீரறிந்து கூறவல்லார் செப்பு. (௨)

தன்னரசு நாடு தருங்கண்டாய் நின்பெருமை
துன்னு மயமில்லாத் தொன்மையா—னின்னருமை
யாரேகாண் கிற்பார்தான் யாதோ வரசுரிமை
சீர்தன் றோவந்து செப்பு. (௩)

எல்லாஞ் சமங்கூறு மேற்றமெய்ஞ் ஞானமெமக்
கெல்லாம் வருமோ விசைகண்டாய்—நல்லார்வெம்
பொல்லா ரெனன்மாய்ந்து புந்திவிசா ரந்தீர்ந்து
கல்லா மடம்பேனல் காண். (௪)

நானே மலந்தின்றே னானே யமுதுண்டே
னானேபேய் நாய்நரியா நண்ணினே—னானே
கழுதை முதலானேனென் கண்ணனுமா யென்றாய்
பழுதுரையா யென்னேநின் பண்பு. (௫)

உன்னையே போகித் துரைசெய்வா யஞ்ஞான
மென்னையே கொள்ளென்று மெப்படிகாண்—டுன்னுமது
நின்போற் றவமில்லை நிச்சயமுந் தானில்லை
யன்பேற்றி நிற்ப னாற்கு. (௬)

உலகா யதன்பூத மொன்றே யிசைத்தான்
வலநீ யான்மாவொன்றை வாயாற்—பலகாலுங்
கூசா துரைப்பைமனங் கோணாய் துணைபெற்றாய்
பேசாநிற் பேமறிந்துன் பீடு. (௭)

மூன்றுரைப்பே மொன்றென்பாய் முத்தியென்பே மேதென்பாய்
சான்றுரைப்பே நானென்பாய் சத்துரையா—யூன்றயங்கு
நின்மாட்சி யெப்படியோ நேருமெமக் கையையோ
துன்மாட்சி யென்பேந் துணிந்து. (௮)

வேறு.

ஆத்திகமு நாத்திகமு மற்றவன்போ னீபேசல்
சாத்திரமோ கண்டாய் சழக்கென்பே—மாத்திகமும்
பொய்யென்றால் யாரோ புகல்வர்நினை மன்பதையில்
வைவர்விலங் கென்றே மதித்து. (௯)

(மாட்சிநிருபயமதமசத்தென்றது.)

உபயமத சித்தாந்த முண்டென்னக் கூறு
முபயோக மில்லாதா யுன்னைச்—சபைநடுவே
தாம்பூலம் வைத்தழைத்தார் தாமுண்டோ தன்னிகரில்
வேம்புரையாய் வந்து விளம்பு. (௧)

இல்லையெனுஞ் சொல்லுக்கு மேழையே மேலோர்கொ
ளல்லவெனுஞ் சொல்லுக்கு மான்றபொரு—டில்லைநடஞ்
செய்வா னருள்போற்றித் தேராதொன் றென்பதெவன்
பொய்யுரைகா ணென்னேநின் பொங்கு. (௨)

உலகமே பொய்யானா லுண்டோ பிறவி
நிலையுமோ மெய்யாக நேருஞ்—சலமுறுநீ

யென்றோ வுலகின்று யோதுவாய் பொய்யென்பே
மன்றோ விகாரங்கண் டாய்ந்து. (௩)

ஏசுமதந் தன்னை யிசைத்தா யுபயமெனப்
பேச வறிந்திலையே பேதையே—காசுபெறு
நின்மதமு மம்மதமு நேர்ந்திடுமோ வொன்றாக
வென்மதத்தின் முன்னே யெதிர்ந்து. (௪)

ஒன்றே பொருளுண்டா யோதினாய் நீயவனு
மொன்றே பொருளுண்டா யோதினா—னொன்றே
பலவான தன்மை பகர்ந்தா யவனோ
பலவாக்கல் சொன்னான் பரிந்து. (௫)

இப்படியே முற்று மிசைக்குங்கா லொன்றாகுந்
தப்புடையா யிவ்வுண்மை தானறியா—திப்படியி
னீயே சமர்த்தனென நிற்பா யெதிர்த்திடின்யாம்
போயொளிப்பா யென்னின் புகழ். (௬)

வள்ளுவனார் தங்கருத்தின் வாய்மை யறிந்தனைபோற்
கள்ளவுரை பேசவெங்கே கற்றனையோ—தெள்ளுமறி
வில்லா யகம்பிரம மெங்கே யவர்கூற்றிற்
சொல்லாய்முன் னேவந்து சூழ்ந்து. (௭)

சொல்லுங் கடவுணிலை தோன்ற நினைவளவாப்
புல்லனே சொன்னாய் பொருந்துமோ—கல்லா
னிழலா னினைவிகந்து நின்றா னறியாய்
பழுதேகாண் சொன்னாய் பளா. (௮)

தன்னைச் சிவமாகத் தான்பா வனைசெய்யப்
பன்னுமே வேதம் படித்தறியாய்—தன்னையே
பாவனையாக் காணாது பாழா யிரைந்தனையே
சிவனையே மெய்ப்பொருளாத் தேர்ந்து. (௯)

நினைவு நினைவென்று நீபடித்த பாடங்
கனவிலே தானுண்டோ காட்டாய்—கனவின்கண்
ணேரு மவைநனவி னில்லாமை யாற்பொய்யோ
சாரும் வினைப்படியே தான். (௰)

வினையாற் சுகதுக்க மேவுங்காண் வீணே
நினைவின் விகாரமென்பாய் நின்போ—தனையென்னே
யந்நினைவி னைத்தானு மாரே யமைத்திட்டார்
தன்னிலமை குன்றமிகத் தான். (௰௧)

நினைவிலுநின் பாலுமர னிற்பதனு லன்றே
நினைவுமெழு நீயுநினைக் கின்றாய்—நினைவோ
ஜடநினையா தன்றியுநீ தானேநினையாய்
படஞான பண்டிதனே பார். (௰உ)

பூரணமென் றக்கானின் புத்துரையொன் றேயென்பை
பூரணமோ தன்னிறைவே பூரணங்காண்—பூரணத்தை
யாயா துரைக்கின்றா யந்தோ வியாப்பியமு
மாயாய் வியாத்தியுட னார்ந்து. (௰ங)

ஏகம் பலவாதல் பூரணமன் றேகமே
யாகமெனக் கொண்டிங் கனைத்துயிரு—மோகமற
வெவ்வுலகு மேவி யிருத்தல்காண் பூரணமென்
றெவ்வமறப் போற்றுமறை யே. (௰ச)

ஒன்றே பலவாதல் பூரணமென் றோதிடுவாய்
நன்றாகா ணப்பலவு நாடுங்கா—னின்றநிலை
தன்னிற் பெருகிவருந் தன்மையுள வேலென்னே
பின்னமுறும் பூரணத்தின் பெட்பு. (௰ரு)

ஐந்தவத்தை யாவுமறி வன்றியிலை யென்றவுரை
மந்தவுரை யென்ன மதிப்பேங்கா—ணைந்தவத்தை
யேனோ வறிவினிடத் தெய்து மகண்டமிரிந்
தேனோ வொடுங்கு மிழிந்து. (௰சா)

எல்லாம் பிராந்தியென வேத்துவாய் நின்போத
மல்லாற் பிராந்தியிலை யாகெடுவா—யெல்லாம்
பிராந்தியெனிற் பேசுவாய் பேதாயுன் சொல்லைப்
பிராந்தியென மோகநிலை பேர்ந்து. (௰எ)

மலடிமகன் வந்தானிவ் வைகறையி லன்னோற்
கலகில் பொருளளித்தே னென்றாற்—சலமுறுவாய்
கொள்ளுவையோ வுண்மையெனக் கொள்ளுவமே நின்சொல்லை
யெள்ளுமதற் கொப்பா வெடுத்து. (௰அ)

அறிவோநின் றெய்வமதற் காகுமோ மோக
மறிவுக் கறிவா மரனே—நிறைவுறுமெந்
தெய்வ மிதுசைவ சித்தாந்த மென்பார்கா
ணுய்வகைநீ யங்கே யொடுங்கு. (௰கூ)

நானேபரமன்றி நாடுங்கா லில்லையென
வேறோ கதைபடிப்பா யேற்பவரார்—நீநானென்

ஞேதிப் பழங்கதையே யுற்றுரைப்பா யுன்னைமலம்
வாதிப்ப தாலிங்கே வந்து. (௨௰)

குணிக்கே குணமால் குறையுரைப்பா யென்னே
குணிக்கோ ரளவுண்டோ கூறாய்—குணமுள்ள
வெவ்வெப் பொருளுமிவ ணேஞகா வக்குணியாச்
செவ்விதினிங் காய்ந்திலைநின் சீர். (௨௧)

அத்துவிதங் கண்டிக்க வாகாது காணீதா
னத்துவிதி போற்பேச லாவதெவ—னத்துவிதி
சைவசித் தாந்தியென ருணறியாய் பொய்ம்மதத்தாய்
செய்வதுதான் மேலிதற்குச் செப்பு. (௨௨)

ஏகமோ வத்துவித மேகான்ம வாதமெனு
மோகமதந் தன்னின் முடங்கிடுவா—யாகெடுவா
யொன்றோ டிரண்டற்ற வுண்மையே யத்துவித
மென்றார் பெரியோ ரிசைந்து. (௨௩)

அத்துவிதப் போலியென வன்றே யறைந்திடுவர்
முத்தருனை யென்று முகம்பார்த்தே—சத்தசத்தின்
பேதந் தெளிந்தறியாய் பேசுவர்கா ணின்னுவர்
வேதாந்தப் போலியென்று மேல். (௨௪)

ஏசுவர்மா யாவாதி யென்றுன்னை மாப்புலவோர்
பேசுவதா வில்லையெனப் பேருலகை—யீசன்
றனையுமே மிச்சையெனத் தானுரைத்த லாலூழ்
வினையிருந்த வாறென் விருப்பு. (௨௫)

வாதிலே வெல்லவெளி வந்தவுனை யென்மிச்சா
வாதியெனக் கூறுவர்காண் மாப்புலவோர்—வேதநெறி
நில்லாய்மா யாவாத மிச்சயத்தி னுற்கண்டாய்
சொல்லிரண்டு மொன்றாந் தொடர்ந்து. (௨௬)

மாயை முதற்பொருள்கண் மாணவே யாங்கொளினு
மேயவவை யொன்றா விளம்பிலங்காண்—பேயுடனே
யாடும்பரஞ்சோதிக் கன்பொன்றே யாங்கொள்ளல்
மூடவுரை சேய்யேலென் முன். (௨௭)

என்னைநான் கண்டின்புற் றேனென் றிடுவையிதற்
கென்னகாண் சான்றுரைப்பா யென்முன்னே—முன்னவனை
விட்டுநீ யுன்னிலநு போகம் விளம்பிடுவா
யொட்டியே மூக்கறைய னொத்து. (௨௮)

கானலினீ ரைப்போலக் காணுமுல கென்ருயக்
கான லெதனிடத்துக் காண்பதெவர்—மானமுறுங்
காரணமே திம்மூன்றுங் காட்டுவா யுன்மதத்திற்
கோரணிகா ணுன்றூர்க் குணம். (உக)

உன்னுதலு மோர்பொருளை யுன்ருமை யுங்கன்ம
மென்னவறி யாதந்தோ வேத்துகின்ரு—யுன்னுதலு
முன்ருமை யும்போகு முத்தமர்கட் காட்படினிங்
கென்னும் பிதற்றுவதா லின்று. (௩௰)

உன்னுமுன்ன ரோர்பொருளை யுண்டாவ தில்லையெனப்
பன்னுதலன் ருேகுற்றம் பார்த்தறியா—யுன்னுமவன்
றன்னில்வே ருய்முன்னே தானுண்டா மெய்ப்பொருளைப்
பின்னமுறக் கூறலெவன் பேசு. (௩க)

உன்னுவது மோர்பொருளை யுண்டாயி னன்ருேநீ
யுன்னுவது வேறென்னே யுள்பொருளா—யன்னியம்வே
றில்லாமை யுன்மதத்தி லேற்பாய் மறந்தனைகொல்
சொல்லுவதென் மாறுபடுஞ் சொல். (௩உ)

உன்னுவா னன்றியிலை யுன்னலெனி லெப்போது
முன்னுதலே செய்வ ஞெழியான்கா—ணன்னவற்றின்
வேரு முலகத்தின் மெய்யுணர்ந்தாய் போன்றேநீ
கூறுவதா லுண்டோ குணம். (௩௩)

எம்மதத்தும் பாவனையென் றேசுகின்ருய் சின்மடமை
சம்மதித்தா ராரோதான் சற்றுரையாய்—செம்மையிலாய்
தேகாதி யைச்சிவமாப் பாவிக்கச் செப்புமறை
பாகம்வரு விக்கப் பரிந்து. (௩௪)

இப்படியே பாவனையா லேத்துஞ் சிவமாக
வொப்பவே யான்மாவை யூகயிலாய்—செப்புமுளா
வோராம லுள்ளபடி யோங்குசிவ நானென்பாய்
தீராயுன் பாவத் திரள். (௩௫)

மாயோன் முதலாக வானோைப் பாவனைபா
லோயா துரைக்கு முயர்மறைகள்—வீயாதா
ரொன்னப் பரம்பொருளா யேன்கெடுவா யெம்பெருமான்
றன்னைப் பணியாம ருன். (௩௬)

எங்கள்பெரு மான்றன்னை யாராகப் பாவித்த
லங்கவனின் மேலில்லை யாதலினுற்—சங்காஞ

மன்னேனைப் பாவனைகட் கப்பாலா னென்றுமறை
யெந்நாளு மேத்து மிசைந்து. (கள)

உள்ளஞ் சுயஞ்சோதி யென்று யெவர்க்குமுனக்
குள்ளஞ் சுயஞ்சோதி யோவுரையா—யுள்ளஞ்
சுயஞ்சோதி யாயிடினீ தொல்வினையிற் பட்டே
மயங்குவதென் கூறுய் மகிழ்ந்து. (கஅ)

ஏட்டுஞா னம்பேசி யேசுகின்று யாவரையு
நாட்டஞா னம்வந்த ஞானியைப்போற்—கேட்டறியா
யுண்டோ சிவஞான மூன்மதத்தி ருனுமுனக்
குண்டாவ தெப்படியிக் கோது. (கக)

வேதமுனக் கேதுரையாய் வேதாந்தப் போலியெனப்
பேதப்பட் டாயனைத்தும் பேசிடினிக்—கேதெனவே
கூறிப்பின் மிச்சையெனக் கொண்டதனுல் வேதமுமேன்
கூறுகிலாய் மிச்சையெனக் கூர்ந்து. (சம)

வேதந்தா னும்பொய்யாம் வேதாந்த மும்பொய்யாம்
பேதமிலா யுன்மதத்திற் பேசுங்கால்—வேதந்தான்
பொய்யானு லெப்படியோ போந்திடுமின் பொய்யுரைதான்
மெய்யாகச் சற்றே விளம்பு. (சக)

இந்துவே தப்பேரை யெங்கேநீ கற்றதுவே
றெந்தவே தங்கண்டா யீண்டுரையாய்—சிந்துமுரை
பேசு மிலேச்சமதப் பேயர்க்கும் வேதமெனும்
வாசகந்தா னுண்டோ வழுத்து. (சஉ)

எல்லா மதங்கட்கு மேற்குமோ வேதமெனல்
பல்லோர் கருமத்தாற் பாழ்த்திடவே—சொல்லாரு
நாதன் மொழியா நவின்றெழுதி வைத்தவெலாம்
வேதமெனல் கொள்ளேம் வியந்து. (சங)

வேத விரோதமென வேறோர் மதத்தையுவந்
தோதுவையே நீதானு முண்மையே—மாதுமையாள்
காந்த னுரைத்தமொழி யொன்றே மறைகண்டாய்
போந்துரைப்பாய் வேறுப் புகழ்ந்து. (சச)

மிலேச்சமதத் தார்க்குமறை மேவுமெனி னந்தோ
மிலேச்சருனை வைதிலரோ வேண்டி—மிலேச்சர்தமில்
வேறுனு யுண்மைசெறி வேத விரோதியெனக்
கூறுய்வந் தென்முன் குறித்து. (சரு)

ஆன்மாத் தனைமறந்து பின்னே தனையறித
ருன்பந்த முத்தியென்ருய் தானேயிங்—கேன்மறந்த
தென்றால் வெறுந்தோற்றமென்பா யெவர்க்கோதா
னன்ருமுன் போத நகைப்பு. (சசு)

சாதனமேன் பந்தமறத் தன்னுருவாய்ப் பார்த்ததனை
யோதுதலே போதுமென்ரு யோகோகோ—வேதமுத
லெக்கலையும் வீணுமுன் னேழைமதிப் போதங்கேட்
டொக்குமெனு மூடர்தமக் கோர். (சஎ)

சரியைகிரி யாயோகஞ் சாற்றுசிவ ஞான
வுரிமையுரை செய்திடுமா லோத்து—மருமறையோர்
போற்றுஞ் சிவாகமமும் போங்தே பசுஞானஞ்
சாற்றுவைநீ கண்டாய் சதி. (சஅ)

இந்தமுடி வெங்குமிலை யென்ரு யுனக்கநஜ
ரொந்தவுல கத்தினுமுண் டேனறியாய்—பந்தமிலை
நானில்லை முத்தியிலை நாடுமொரு தெய்வமிலை
வானில்லை யென்பானை வாழ்த்து. (சக)

திரக்குறியைக் காட்டினன் றேசிகன்கா லம்பார்த்
திருங்கருணை யாலென் றிசைத்தாய்—சிரங்கவிழா
தென்னே குறியேதிங் கேற்றவனார் சொன்னவனார்
பின்னேது காலமெனல் பேசு. (ருய)

காலமது பார்த்திருந்து காட்டினு னென்றிடுநீ
சாலப் பழிப்பா * முன் சாற்றியதிங்—கேலவொரு
சாதனமும் பந்தமறத் தான்வேண்டா மென்றென்னே
யேதமொழி சொன்னு யெழு. (ருக)

என்னேவுன் ஞைசை யெதிர்வீழ்ந் திறைஞ்சியுனை
மன்னேயென் மாணிக்க மாமலையே—பொன்னேயென்
றேத்தி யொருவாதி யெய்தினன் மெய்ப்பொருளென்
றேத்துவாய் வெட்கமிலை யே. (ருஉ)

(வைணவமினைத்தெனும் வண்மையுரைத்தது.)

சைவ மதக்கழற்றி சாற்றினு யாகெடுவாய்
சைவமோ தான்கழலுஞ் சைவலமே—சைவமெனுஞ்
சொன்மங் கலந்தோராய் சோம்பனே நின்மதமே
புன்மங் கலங்காணிப் போது. (க)

* மேல் (சஎ) வது வெண்பாவாலறிக.

சைவத்தை நீகழற்றுந் தன்மையினைப் பின்காண்பேஞ்
சைவத்தின் வேறாஞ் சமயங்கள்—சைவத்தை
நோக்க விழிந்திடுமா னொய்தாகு நின்சமய
நோக்கத்தின் மேலா நுவல். (உ)

வைணவத்தை வாதிக்க வந்தாயென் பேதாய்
வைணவத்தி லுன்சமய மாண்போ—வைணவத்தில்
விண்டுவா மோர்பசுவை மெய்ப்பொருளென் பார்நீதான்
கண்டுரைப்பாய் நின்றனையே காண். (௩)

வைணவசித் தாந்தம் வகையா யுரைத்தே
வைணவத்தைக் கண்டித்தல் வாய்க்கும்—வைணவத்தின்
றெற்குமேற் குங்காணாய் தென்னா விராமனெனச்
சொற்பதறாய்ப் போக்குவைவீண் சொல். (௪)

கருங்கற் பெருமாளைக் காட்டியோ மொத்தைப்
பெரும்பொங்கற் சோற்றைப் பிசைந்தோ— விரும்பி
வைணவத்தை நாட்ட வருவார் புகழ்சேர்
வைணவத்தில் வல்லார் மகிழ்ந்து. (௫)

முருகன் சடகோபன் முன்னுரைத்தா ரென்றாய்
முருகனென லாரோ மொழியாய்—முருகனெனக்
கந்தரநு பூதியினைக் கட்டுரைத்தா ரைச்சொன்னாய்
மந்தமதி யாய்நீ மகிழ்ந்து. (௬)

முருகன் றிருவருளை முன்பெற்றா ரெங்க
ளருணகிரி யாரவரோ டந்தோ—கருநிறமா
றன்னைப் பரமாகச் சாதித் தவன்றனையே
சொன்னாயுன் பேதமைகாண் சூழ்ந்து. (௭)

என்ன வவனு மிதுநா னுடலென்று
னென்னவுரைத் தாயறியா தேழையே—சொன்னபடி
யெங்கேகண் டாயெந்த வைணவனோ வாங்கிசைத்தான்
சங்கைகொண்டாய் கொண்டாய் சநி. (௮)

முன்னே யொருஜீயர் முன்னிற்க மாட்டாம
லென்னேயோட் டம்பிடித்தா ரென்றுரைத்தாய்—பின்னேதான்
சீராரும் வேங்கடத்துச் சீயருந்தோற் றாரென்றாய்
பேராருஞ் சொப்பனமோ பேசு. (௯)

இம்மதத்தை நீகண்டித் திட்டதொன் றும் யாங்காணே
மம்மர்கொண்டாய் சொன்னதையே செல்விமதத்—தெம்மதமுங்

கண்டித்தே நாமென்று கண்மூடி வாழ்கின்றாய்
கண்டித்தே முன்னையினிக் காண். (ௌ)

## (சத்திமார்க்கஞ் சைவமேயென்றது.)

மேலேநீ சத்திமதந் தன்னைவிளங் கக்காட்டி
மாலேபூண் டாய்மறுக்க மாண்பாமோ—நூலோரா
தாருமிலா வூரி லசுவமே தஞ்செய்யப்
பாரின்மிக வல்லாய்நின் பண்பு. (க)

சத்திமதம் வேறேதான் சைவத்தை விட்டறியாப்
பித்தர்சில ருன்போல்வார் பேசுவதாற்—சத்திமதம்
வேறென்னக் கொண்டே விரும்பினாய் கண்டிக்க
மாறில்லை கண்டாய் மதி. (உ)

சாத்தேய மென்பதுதான் சௌபாக்ய மேமுதலாச்
சாத்தேய தந்திரத்தைச் சாருமால்—சாத்தேய
மென்ன வொருமுதலா வேற்பர்பரி பாகமிலார்
முன்னவனைப் போற்ற முனைந்து. (ங)

சாத்தேய ஞனென்று சாற்றுவான் வாமியவன்
மூத்தோன்கா ணின்றனக்கு முன்னறியாய்—மூத்தோனு
முன்றனக்குத் தம்பி யுலகா யதன்கண்டா
யென்றனக்குண் டோவாழ் விது. (ச)

பிரமவித்தை நின்றனதாப் பேசுவதென் காணீ
பிரமஞ் சிவனுமால் பேதாய்—பிரமமெனுஞ்
சொல்லைத் திருடியதாற் சொந்தமென லாமோநின்
புல்லுரைவெல் லாதென்முன் போந்து. (ரு)

## (பிரமஸமாஜப் பேரோதென்றது.)

பிரம ஸமாஜமெனப் பேசுமத மெங்கே
யுரமுறக்கண் டிங்கேநீ யோத—லருளில்லா
யாரோ சிலபேய ராணவத்தாற் கத்தியழிந்
தாரோதி ஞயவரா யார்ந்து. (க)

எங்கே யவர்மதநூ லெக்காலந் தோன்றியது
பங்காரு முன்னோரார் பார்த்தறியாய்—கொங்காரு
நன்மாலை வேய்ந்திட்ட நல்லா சிரியரெவ
ருன்மாலைப் போக்கும்வழி யோர். (உ)

(காலமினைத்தெனக் கழறப்போந்தது.)

காலப் பிரமமதங் கண்டிக்க வந்தாய்போங்
காலமுனக் கோதானீ கண்டறியாய்—காலந்தா
னேனில்லா மற்போகு மெத்தனைபே ருண்போல்வா
ருனிற்றுப் போனு ரொழிந்து. (க)

எத்தனையோ தான்பிரம மீடழிந்து போகவது
சத்தியமாய்த் தானிற்குந் தானறியாய்—செத்தொழிந்து
போனபிர மங்களிலே போய்ச்சேர்வாய் நீபிரம
மானபடிக் காலத்தை யாய்ந்து. (உ)

காலந் துணையாகக் கண்ணுதலோ னேவலினுன்
மூலத் தொழின்முடிக்க முன்னுங்காண்—கால
முடிக்குங்கா லுன்னை முடிப்பையோ நீதான்
றுடிக்கின்றுய் வீணே தொடர்ந்து. (ங)

(சூனியவாத சொருபமுரைத்தது.)

சூனியம்வே றுண்டாகச் சொல்வதெவ னின்மதமே
சூனியங்கண் டாயுண்மை சொல்லறியாய்—சூனியமாச்
சொல்வா யுலகமுயிர் தொல்பரனிம் மூன்றுமிது
சொல்வார்நீ யன்றியெவர் சொல். (க)

மாயாவா தத்தலைவன் மற்றொருவன் முனுக
நீயோதல் காணிந் நெடும்புவியிற்—பேயாமுன்
கண்ணே புதுமையிது கண்டேமுனைப்பொருளா
யெண்ணுமிற் பார்தா மெவர். (உ)

(மாயாவாத மாண்பொருளுரைத்தது.)

உன்றலைமேற் காக்கைமல முண்டென்றுன் மாய்க்கறியா
துன்றலைமேற் றானுண்டென் றோதுவான்—றன்கதைபோற்
சேரப் பிதற்றுகின்றுய் நீயோ யயலோகா
யேர்கொண்மா யாவாதி யென்று. (க)

மாயையிலே பட்டுழலு மாணறிவி லாப்பசுவை
மேயசிவ மென்றுரைப்பாய் மேதையோ—மாயையிலே
யாழ்ந்துழலு மோசிவமு மந்தோமா யாவாதத்
தாழ்ந்துழல்வை கண்டா யறி. (உ)

பிரமத்தின் வேறாக மாயைதனைப் பேசாய்
பிரமமாக் கொண்டதனாற் பேதாய்—பிரமங்காண்
மாயையினைக் காதலினான் மாயாவா தப்பேயை
யேயவுரைப் பேம்யா மிசைந்து. (௩)

மாயையசத் தென்போமெம் மாதேவன் பக்கலடைந்
தாயபசு பாச மறுமென்றே—நீயொருசற்
றேனும் விலக்கறியா யென்பதுகண் டன்றோநீ
தான்மாயா வாதியென றான். (௪)

சொன்மாத் திரங்கண்டாய் சூழ்ந்திலது மாயையெனல்
பொன்மாத் திரங்கண்டாய் பொய்ப்பொருளன்—றான்மாயா
வாதத்தில் வீடுமனை வாசலிவை மெய்யாங்காண்
வாதிப்பாய் விட்டனைபோல் வந்து. (௫)

ஓயாது பொய்சொல்லி யுள்ளதையிங் கில்லதுவாய்
வாயோவா தென்றும் வதறுவதால்—மாயாவா
தப்பெயரின் பொய்ம்மதத்துக் காகுங்கா ணிவ்வுண்மை
*யிப்பொழுதோ சொன்னோ மெடுத்து. (௬)

ஒன்றுநீ யன்றென்று முன்னையலா தின்றென்ன
வன்றுரைத்த வாத்த ரருமொழியை—நின்றனதாக்
கொண்டுரைத்தா யந்தோயாங் கூறுவமா லுண்மையரு
ளுண்டானாற் கேட்டினிதி னோர். §(௭)

நீயென் றுரைத்திடலா னின்மலனைக் காட்டிடுமா
னீயன் றெனவொன்று நீடுலகு—மேயவுயிர்
தாமொன் றினுஞ்சேராத் தன்மையா லென்றறிவாய்
மாமறையை வாழ்த்தி மகிழ்ந்து. §(௮)

உன்னையலா தொன்றுமிலை யோதிடினிங் கென்றதுசீர்
மன்னுயிர்தா னேயியங்கு மாண்பிலதாற்—பின்னுலகந்
தானுந்தா னேயியங்காத் தன்மையா லாங்கவற்றைத்
தானியக்குஞ் சார்ந்ததனாற் றான். §(௯)

---

* "மிண்டியமாயா வாதமென்னுஞ் - சண்டமாருதஞ் சுழித்தடித்தாஅர்த்து" என்று ஸ்ரீவாசகத்தினும், "மாயாவாதப் பேயாவுனக்கு" என்று சங்கற்ப நிராகரணத்தினும் போந்தவாறறிக.

§ (௭-௮-௯) வது பாடல்கள் (ஒன்றுநீயல்லை யன்றியொன்றில்லை) என்று ஸ்ரீவாசகத்திற்போந்ததனை விளக்கியவாறு கண்டுணர்க.

ஓட்டுவான் வண்டியல வோட்டுறுமவ் வண்டியிலை
யோட்டுவா னன்றி யுணருங்காற்—கேட்டறியா
யென்றதிருட் டாந்தத்தை யேற்றிடுவா யாகெடுவாய்
குன்றுங்காண் மாயைக் குடி. (௰)

(நாத்திகமிதுவென நாட்டப்போந்தது.)

நாத்திகனின் சோதரன்கா ணாடறியா தென்னோநின்
வாத்திமையைக் காட்டி வடிக்கின்றாய்—நாத்திகனைக்
கண்டுரைத்தோ னான்பொய் கடவுளும்பொய் யென்பானால்
கண்டுலகொன் றேமெய்யாக் காண். (௧)

நீயோ வுலகில்லை நீதிபரன் றானில்லை
யேயாநிற் பேனான்றா னென்னவே—வாயோவா
தந்தோ பிதற்றுகின்றா யாதலினா னாத்திகன்கா
ணெந்தோழர் சொற்படிநீ யீங்கு. (௨)

(ஆத்திகஞ்சைவ மாமெனவுரைத்தது.)

ஆத்திகருக் கந்தோ வறிவுறுத்த வந்தாய்நீ
நாத்திகர்தம் மிற்சேர்த்து நன்றோதான்—நாத்திகரா
நீவிருநுஞ் சோதரரு நேர்படினென் னாவீர்முன்
போவிரன்றோ வுள்ளம் புலர்ந்து. (௧)

ஆத்திகத்தி னுண்மை யறிவையோ நாத்திகனீ
யாத்திகத்தைக் குற்றமென்றா யாகெடுவா—யாத்திகர்யாங்
கொள்வேஞ் சிவப்பொருளைக் கோதில் பழம்பொருளாய்க்
கொள்வேம் பசுபாசங் கூர்ந்து. (௨)

†உள்ளதுமன் றில்லதுமன் றொன்றுமுய ரொண்பொருளொன்
றுள்ளதிலை யோவா துரைத்தனரா—லொள்ளியபே
ரன்பா லருணகிரி யாரெம்மை யாளுடையா
ரன்பேது மில்லா யறி. (௫)

†உள்ளதல வென்றதுநீ யொன்றுவதா லாணவத்தி
னுள்ளமலம் போகுமெனி னுற்றிடுங்கா—ணுள்ளபடி
யென்னா ருயிரனையா ரெம்மனோர்க் கில்லதல
வென்னுமதன் மெய்ப்பொருடா னேத்து. (௪)

† "உளதன்றிலதன்று" எனக்கந்தரநுபூதியிற்போந்ததனை விளக்கியவாறறிக.

புண்ணியமுண் டானாற் பொருந்துங்கா ணிவ்வுண்மை
மண்ணிற் பிறந்திறக்கு மாண்புடையாய்—புண்ணியமே
கேட்கப்பெற் றாயுண்மை கிட்டிலையே லுன்பாவ
மாட்படுவாய் காலனிடத் தால். (ரு)

சொல்லாற் றுடிக்கின்றாய் சொற்பொருடேர்ந் தாய்போன்று
பொல்லாதாய் நிந்தை புரிவதெவன்—வெல்லாம
லாத்திகரா மெம்மவரை யாகெடுவாய் நாத்திகனீ
நாத்திகரோ டொக்க நவின்று. (சா)

---

## (போலிஞானத் தன்மைபுகன்றது.)

போலிஞா னம்பேசிப் பொங்குகின்றாய் நீயுமொரு
போலிஞா னந்தூற்றப் போந்தனையே—போலியெனுஞ்
சொல்லுனக்கே சொந்தங்காண் சொல்லுவதென் மற்றவர்பாற்
கல்வியறி வில்லாய் கனிந்து. (க)

அறிவுநீ மெய்யே லறியாமை யேனிற்
கறிவிப்பான் றன்னை யகன்று—யறியாமை
போகாது காணுன்னைப் பொங்குநர கக்குழிவிட்
டேகாது காணிங் கிதென். (உ)

வேதாந்த சித்தாந்த மெய்ந்நிலைமை கண்டனையோ
வேதாந்த சித்தாந்த வேற்றுமைக—ணூதாந்த
போதங் கழலுங்காற் போந்திடுமோ பொய்ச்சமய
வாதம் புரிந்துழல்வாய் வந்து. (ஙு)

ஞானியென யார்சொன்னார் ஞாயமா யுன்னையுயர்
ஞானியென நீயே நவில்கின்றாய்—ஞானியர்தங்
குற்றேவல் செய்யக் குணமுண்டாங் குண்டுணிபோ
லெற்றேநின் வீண்பிதற்ற லீங்கு. (ச)

அஞ்ஞான தேவதையா மப்பாநீ யுன்பெருமை
யஞ்ஞான பூரணர்தா மேயறிவா—ரஞ்ஞான
மில்லாச் சிறியேங்க ளெப்படியோ காண்பதுநின்
வல்லாண்மை கூறுவையே வந்து. (ரு)

பக்குவம்வந் தாற்றெரியும் பாரென்பார் ஞானிகளென்
றிக்குமொழிப் பேதையர்போ லேசினாய்—பக்குவம்பார்த்

தன்றோ வொருநால்வர்க் காலின்கீ ழன்றுரைத்தான்
பின்றாழுஞ் செஞ்சடையான் பேசு. (௬)

பக்குவம்வேண் டாமென்ற பண்பனீ காலம்பார்த்
தொக்கவுரைத் தான்குருவென் றோதியதென்—சிக்குடையாய்
¶முன்னே முரணறுத்தே முன்றாழு முன்னடியார்
தன்மையினைப் பேசுகண்டாய் தாழ்ந்து. (௭)

உனக்கே பரிபாக மொத்திலதே லெங்கே
யுனக்கடியர் பாக முணர்வாய்—மனக்கோ
ளறும்வித்தை யாய்ந்தறியா யப்படியே காண்பே
முறுமடியர் நின்னவர்பா லுற்று. (௮)

உபாதி யுபாதியென்பா யோகோ வறியா
துபாதியெனுஞ் சொல்லே யுபாதி—யுபாதி
யெதற்கோமற் றேதோதா னெங்குதிக்கக் கண்டாய்
மதங்காணிம் மாசுரைக்கு மாண்பு. (௯)

நீசொல்லும் வாசகத்தை நேர்ந்தாய்ந் திடினெல்லா
மாசுகண்டா யுண்மை வழக்கிலையே—பேசுவைநீ
ஞாயமென வொன்றிலும்யா னாடிலமே ஞாயத்தை
ஞாயமெங்க ணன்மதத்தி னூடு. (௰)

(அடாஞானத்தின் றன்மையறைந்தது.)

அன்னியர்தம் பெண்டை யணைவானை வைதணையுந்
றன்னுடைய ஞானத்தாற் றக்கதே—யன்னியர்தங்
கையிற் பொருள்பறித்துக் காரணஞ்சொல் வேமென்பார்
நைய வுரைத்திலையென் னூடு. (௧)

மட்டிகளைச் சேர்த்தேதான் மாவாக் கியஞ்சொல்லித்
தட்டிப் பொருள்பறித்துத் தான்வாங்கிப்—பெட்டியிலே
போட்டெடுக்க வஞ்சுகின்ற பூரணமெய்ஞ் ஞானிகளைக்
கேட்டறியா யென்னோ கிளத்து. (௨)

வட்டிக்குத் தான்கொடுத்து வர்த்தகமா வேதாந்தங்
கட்டியே விற்பனைசெய் கள்ளர்தமை—விட்டதெவன்
பேசா திகழ்ந்தந்தோ பேசுவையே தற்காணப்
பேசாது ஞாயமிவண் பேசு. (௩)

¶ (௨௨) வது பக்கம், (௫௧) வது பாடலாற் கண்டுணர்க.

பசியால் வருந்தினர்க்குப் பட்சமா யன்ன
மூசியாம விட்டறியா மூடர்க்—கசிமேவு
மந்திரத்தைச் சொல்லி மகிழ்கின்ற மாமூடர்
நைந்திடவென் செய்யகிலாய் நாடு. (௪)

ஊனுண்ணை னீக்கி னுடம்புக்கா காதென்றே
யூனுண்டு வாழ்ந்தங் குயர்ஞானக்—கோனென்
றிருப்போனை யெள்ளலைநின் னெண்ணமறி யேமால்
விருப்போ வன்னோர்தங்கண் மேல். (௫)

கள்ளாதி யுண்போரைக் காட்டிப் பலபாவா
லெள்ளாநின் றூயூனி விச்சையினூர்க்—குள்ளே
யொளிக்கும் பதமாக வோரிடமே சொன்னாய்
சுளித்ததோ வுன்மனமே சுட்டு. (௬)

(கல்வியாதார விளக்கங்கண்டது.)

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவ
னற்றூ டொழுதிலரே னன்மையிலென்—றுற்றுமையாக்
கண்டதிரு வள்ளுவனைக் காட்டிலுநீ கண்டனையோ
கண்டவர்போற் பேசுவதென் காண். (௧)

கற்றன்றோ நீபாடக் கற்றாய் வெறும்பாட்டை
வெற்ற வெறுஞ்சொல்லை வேண்டியே—முற்று
மறிவுக் கறிவா யறிவிப்பான் றன்னைக்
குறியாமற் கற்றதெவன் கூறு. (௨)

கல்வியோ கல்வியினைக் கற்குங் கசடகலாக்
கல்வியாய் தன்னையே தான்கற்குஞ்—சொல்விதித்தாய்
தன்னையுமெய்த் தேசிகனுந் தன்னையுமே கற்பிப்பான்
றன்னையே கற்றிடுவேந் தான். (௩)

(வத்துநிலைமை வகுத்துரைசெய்தது.)

இல்லையுள தல்லவா மென்றவழக் கோர்நான்கிற்
சொல்லும் பொருள்விரித்துச் சொல்லுவையேல்—வெல்லுவையென்
றன்னையவா ஞானத்தாய் தானேதா னுமென்று
சொன்னதனு லென்னபயன் சொல். (௧)

இல்லையெனற் கெப்பொருட்டா னேற்கும்பின் னுண்டென்ற
சொல்லி லெதுபொருடான் றோன்றுமா—லல்லவா
மென்பதற்கு மென்னபொரு ளேற்கின்று யாகெடுவாய்
துன்பறவே யீங்கவற்றைச் சொல். (௨)

பொன்னே பணியாம் புதுமையினு லென்கண்டாய்
கொன்னே பணியாகக் கொண்டிடினும்—பொன்னேகாண்
மாறிற்றே காரியந்தான் மாட்சிகொளுங் காரணத்தி
லேறிற்றே தோட மிணைந்து. (௩)

பொன்னே பணியாகப் போந்திடுமோ கண்டறியா
யென்னேதா னின்பிரம மேய்ந்திடுத—றன்னேரில்
பாசம் பசுமுதலாம் பல்விதமாய் வேறுபடற்
காசறுனா யங்கண் டறை. (௪)

தெரிவன்றி யெங்கே செகத்தென்றாய் நீதான்
றெருவந்தா லன்றே தெரியுந்—தெரிவின்றி
யெங்நோ முங்கூசா தேசுவதா லென்கண்டா
யென்னேநின் வீண்மயரு னீங்கு. (௫)

தெரிவே செகத்தென்றாய் சேர்ந்தெதனு லாச்சோ
திரிவன்றே யுண்மையோ செப்பாய்—தெரிவேயெல்
லாமென்ற சொல்லுண்மை யாய்ந்திடுவாய் நின்போல்வா
ராமாமென் னும்மவைக்க ணுர்ந்து. (௬)

‡உன்றெரிவுக் கெட்டா னொருவன் கடன்கார
னுன்றெருவில் வந்தா லுதைப்பாயோ—வென்றெரிவிற்
பட்டிலைநீ யாதலினுற் பாழானு யென்றிருந்தேன்
பட்டதெவன் மீண்டுமெனப் பாழ்த்து. (௭)

நானை யெமன்வருவா னற்றெரிவோ டென்றுமிருந்
தூனையிடா தன்னேற்கண் டோதுவாய்—பானைவிரி
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
பங்கடைந்து †வேதம் படித்து. (௮)

*மரத்தூனை யன்றி மாமில்லை மேவு
மரத்தூனு மல்ல மாமு—முரத்தோது

‡ நீ கடன்பட்டிருந்தும், உன்ஞாபகத்தில் வாராதவன் என்பது.

† தமிழ்வேதம்=திருவாசகம்.

* (௨௬) வது, பக்கம் (எ) வது, பாடலிற்போந்ததனைப் (பூர்வபட்சியார்) உபமானமுகத்தால் விளக்கிக்காட்டியது.

வேனென் றெழுவாயுன் வேதாந்த நன்ருங்கா
ஞானென்ற வேபிரம முற்று. (௬)

மரத்தூண் மரமென்ற மாண்பறியா யெங்கே
மரத்தன்மை விட்டதுகாண் மன்னு—மரத்தூளுந்
தானேயுண் டாகுந் தகைகமைத்தோ கண்டறியா
தேனே கெடுவா யினி. (௰)

மரத்தூளோ மீண்டு மரமாகுங் காட்டாய்
மரத்தூளை விட்டுவெறு மண்டூ—ஞருத்தோற்ற
மன்றிமர மில்லையென லாகுங்கா ணின்பிரம
மன்றியிலை யிவ்வுலக மால். (௰௧)

அபேதவா தங்கா ணறைந்தாய்வே தாந்த
முபாதியிலை யென்றீங் குறுமோ—சுபாவமதாய்
முத்தி நிலையறியாய் முன்னுவாய் வேதாந்த
மத்துவித மென்றினிதி ஞய்ந்து. (௰௨)

நானறிவன் றென்கைக்கு ஞாயமிலை யென்றதெவ
னேனறிவி லாதென்முன் னேத்துவாய்—வானறிய
மண்ணறிய நீயறிய மாமுனிவோர் தாமறியக்
கண்ணறிவிங் காயினேநீ காண். (௰௩)

கண்டானே காணுங் கணக்குளதோ காட்டாக்கால்
விண்டோ யிரவி விளம்பறியாய்—கண்டானே
கண்டாலன் றேதனையு மற்றதையுங் காணலா
முண்டாக நீயறிவா யோர்ந்து. (௰௪)

தெளிவதாற் புத்தியினைச் சித்தாகச் சொல்வார்
தெளிவுடைய சீவன்முன் சித்தோ—தெளியுங்காற்
சித்தாகுஞ் சீவன் சிவன்முன்னர்ச் சித்தோதா
னெத்தாலுஞ் சொல்வே மிசைந்து. (௰௫)

கண்ணறிவு நீயாகக் காணலா மீசன்றான்
கண்ணுக்குக் காட்டறிவாக் காணுமா—லெண்ணுங்காற்
பானுவறி வென்னப் பகுத்தறியா யாணவத்தி
லேனமுங்கு கின்ற யெழு. (௰௬)

சிவஞானத் துண்மை செறிந்திடுமோ தானே
யவனருளா லன்றி யறிவாய்—சிவஞான
மெய்தத் தவஞ்சற்று மில்லாய் பசுஞான
மெய்தினுய் சீசீ யிகழ். (௰௭)

(தத்துவவிளக்கஞ் சாற்றப்போந்தது.)

தத்துவவி ளக்கமெனச் சாற்றினா யுன்னளவா
யத்தையே சொல்வித்தா னாலநிழல்—வித்தகனா
மெந்தை யவனருளா லேத்துகின்றோ மன்னோனைச்
சிந்தமலஞ் சேருஞ் சிவம். (௧)

பொன்னிற்றோன் றும்பணிகள் பொன்னன்றி மண்ணாமோ
பொன்னாம் பணியுருக்கிற் பொன்னன்றி—யென்னாமோ
வந்தோ வதையுருக்கி லாமோதான் மண்ணென்றாய்
விந்தைகா ணேனாம் விளம்பு. (௨)

சித்திற்றோன் றும்பொருள்கள் சித்தே யசித்தாமோ
சித்தாம் பொருட்டிரள்கள் சித்தன்றி—மற்றாமோ
வந்தோசித் தாமவைக ளாகுமோ தான்சடமாய்
சிந்தாதென் முன்வந்து செப்பு. (௩)

சுத்தவழி வாயிடினீ சும்மா விராமலிவண்
கத்துவதென் சார்போதன் காணீதா—னத்துவிதங்
கண்டாலன் றிச்சிவனைக் காணும்வழி யின்றாமால்
தொண்டாய்த் திரிந்தருளிற் றோய்ந்து. (௪)

(அத்துவிதத்தி னரும்பொரு ளுரைத்தது.)

அத்துவிதத் தன்மை யறியா யறிவொன்றே
வத்துவெனல் விட்டிங்கே மாறாக—வத்துவிதங்
காட்டுவே னென்றெழுவாய் கண்மூடி யானாய்கா
ணாட்டுவாய் நின்மதத்தை நன்கு. (௧)

ஏகான்ம வாதியென வேற்றார் பெரியோர்நின்
மோகாந்த காரத்தின் மூலந்தேர்ந்—தேகமாம்
வத்துவே யுள்பொருளாய் வாதிப்பா யாதலினா
லத்துவித மேதுக் கறை. (௨)

ஒன்றே பொருளானா லொன்றென்னல் விட்டுமரு
ளன்றேநீ யத்துவித மாய்ந்திடுத—லொன்றோ
டிரண்டல்ல வத்துவித மென்பார்காண் மேலோர்
முரண்டெறவே யென்று முணர்ந்து. (௩)

ஒன்றிரண்டா காம லுபயமுமின் றாகாம
லொன்றுங்கா ணத்துவித மோர்கிலா—யொன்றென்று

நீயேன்றோ வத்துவித நேர்வா யகம்பிரமப்
பேயேவந் திங்கேதான் பேசு. (௪)

துவிதியோ வத்துவிதஞ் சொல்லானின் போலக்
குவியவே யுள்ளமருள் கூடாய்—புவியின்க
ணத்துவிதஞ் சொன்னு யழிந்துபோ முன்னேக
முத்தியிலா யென்ன்றோ வுரை. (௫)

அறிவுதனி லாநந்த மாநந்தந் தன்னி
லறிவிலதென் ருய்பேதை யானு—யறிவின்க
ணுநந்த மில்லையெனி லார்க்கோ வதுமற்றிங்
காநந்த மில்லா யறை. (௬)

ஆநந்தந் தன்னி லறிவில்லை யென்னிலுனக்
கூனந்த மாவதிலை யோர்ந்திடுவா—யாநந்தந்
தானே தனிக்குமென ருனெப் படிகண்டா
யேனிந்த வீண்மாய மீங்கு. (௭)

பாலிற் றயிருண்டோ பாலுண்டோ தான்றயிரி
லேலுங்கா ணுத்திவற்றை யென்றிடினீ—பாலேய்ந்
தறிவுதா னுநந்த மாகிப்பின் ணுங்கே
செறியுந் தயிர்நிலையைச் சேர்ந்து. (௮)

பாலே தயிராய்ப் பரிணமிக்கு மோதானே
யேலாய் பிறைக்குற்ற மென்னவே—மேலா
வுரைக்குமுய ராநந்த மொத்திடுமோ காணீ
யுரைக்குந் தயிர்முன் னுரை. (௯)

ஒன்றுசிதைந் தோன்ருன தொவ்வா தறிவினிடத்
தோன்றுமா நந்த முரைசெய்வார்க்—கொன்றுங்காண்
பண்ணையு மோசையும் போலப் பழமறைதேர்ந்
தெண்ணுவா யத்துவித மீங்கு. (௧௦)

பேரறிவுஞ் சிற்றறிவும் பேதமிலை யென்றணையுன்
கூரறிவோ வீதறியாக் கொள்கையினு—யீரறிவு
மொன்ரு வறிவிக்கு மொன்றறியு மற்றதுதா
னின்ருய்ந் திலைமடமை நேர்ந்து. (௧௧)

எல்லாமா யல்லவுமா யென்றுரைத்தார் தம்வாய்மை
கல்லாய் நினதாகக் கள்ளிணையால்—பொல்லாயென்
முன்னே யொருஞானி யென்ன மொழிந்திட்டா
யென்னேநின் னேழைமதி யே. (௧௨)

"கட்டு முறுப்புங் கரணமுங் கொண்டுள்ள
மிட்டதொரு பேரழைக்க வென்னென்றாங்—கொட்டி
யவனுளமா கில்லா னுளமவனு மாட்டா
தவனுளமா யல்லனுமா மாங்கு." (௧௩)

என்ற திருப்பாட்டி னேற்றங்கண் *டெல்லாமா
யன்றுமா யென்ன வறைந்தனரா—லன்றுபெரி
யோரவ் வுயருண்மை யோகோ வறிந்திலைவீண்
காரியங்கண் டாயதனைக் கட்டு. (௧௪)

அத்துவித மோகா ணபேத மறியாயெம்
மத்துவிதம் பேத மபேதமுட—னித்துவித
மொன்றும்பே தாபேத மொன்றினிலுஞ் சேர்ந்திலதா
னன்றறிவாய் சொன்னே னயந்து. (௧௫)

சாயையுரு விற்காணுந் தன்மைபோ லெப்பொருளு
நீயுணர்த்தாய் மெய்ப்பொருளி னேர்ந்திடுமென்—றாய்ந்தறியாய்
சாயையுஞ் சாரிடமுந் தாமுளவே லொன்றென்னல்
பேய்மதிகா ணுண்டோ பிற. (௧௬)

உருவிருந்தா லன்றோதா னென்றிடுமோர் சாயை
யுருவோ பிரம முரையா—யுருவினிலாஞ்
சாயைதனைக் காண்பவரார் சார்ந்திடுமோ தான்சாயை
மேயபல பேதம் விளம்பு. (௧௭)

(காட்டபேத விளக்க நவின்றது.)

மனிதாதி ரூபங்கண் மண்ணளவாக் காணு
தினிதவற்றைச் சித்தென்று லேற்பா—ருனைப்போல்வா
ரன்றியிலை காணசித்தா மன்னவைசித் தாமோதா
னென்றவுரை மூட மொழிந்து. (௧)

எப்பொருளு முண்டாங்கா ணேனில்லை யென்றிடுவா
யொப்பின்மதங் கொண்டதனு லோர்போது—மெய்ப்பில்சிவந்
தன்னைநீ கண்டறியாத் தன்மையா லின்றோதா
னன்னையத்த னுமவன்று னுங்கு. (௨)

அஞ்ஞானிக் கேதுசிவ மப்படியே யாகுங்காண்
மெய்ஞ்ஞானிக் கிவ்வுலக மெய்யுணரா—யஞ்ஞானிக்

* "எல்லாமா யல்லவுமாய்" என்று திருவிளையாடற்புராணத்தினும், "உலகெலாமாகி வேறா யுடனுமாய்" என்று சிவஞானஸித்தியாரினும் போந்தவாறறிக.

கில்லாத தாற்சிவமிங் கில்லாமற் போயிற்றே
கல்லாயவ் வாறுலகைக் காண். (௩)

நானுமொன் னுள்ளமார் ஞானங்க ளாமொன்னே
வானோர் பிரானுள வந்திலனேற்—றுனெனவே
சிவேசர் தங்கிலையைச் செப்பினார்க் கென்பகர்வாய்
நாவேறு நன்மையிலாய் நாடு. (௪)

ஞானத்தை யோர்போது நாமேன்கண் டித்திடுவ
மூனத்தை யேகில்லா தோட்டுவமால்—சேனத்தை
யூர்ந்தோனு மாமலரி லுற்றோனுங் கண்டறியார்க்
கார்ந்தன்பு நாடி யடைந்து. (௫)

நீயேகா ணஞ்ஞான நீந்தகிலா தெஞ்ஞான்று
மோயாது வைகின்று யுத்தமரை—யாயாது
மெய்ஞ்ஞான மீதென்ன மேவியே யஞ்ஞான
மெய்ஞ்ஞாய நாடறியாய் மேல். (௬)

வேதாந்த சித்தாந்த மெய்யாய கில்லாய்நான்
வேதாந்தி யென்றெழுவாய் வெய்யுரையாய்—வேதாந்தம்
வேறோசித் தாந்தத்தில் வேறென்பா யுன்கயமை
நீறுங்காண் சற்றேமுன் னில். (௭)

(சுகநிலை.)

பதியாலுண் டாமின்பம் பார்த்ததுண்டோ வென்ற
பதிதனே யான்மாவைப் பார்த்தோ—வெதிருரைத்தாய்
சொன்னாய் வெறுஞ்சொல்லே சொல்லுவமால் கண்டேதான்
முன்னோன்றாட் கன்பு முதிர்ந்து. (௧)

கண்டனையோ நீயுன்னைக் காட்டுவையோ வுன்னையெனக்
கண்டப் புரட்டனென லாயினைகாண்—கண்டேதா
னுன்னைச் சிரிக்க வுடம்படுத்தா யாகெடுவாய்
முன்னைச் சிலுகறுப்பாய் முன். (௨)

அறிவி னினைவுகன வன்றிவெறும் பாழு
மறிவே மெனவறைந்தா யச்சோ—வறிவுதனைப்
பூரணமென் பாயன்றே போந்திடுமோ நன்னுதலிற்
சேரணவு கண்டமுதற் சேர்ந்து. (௩)

அறிவென் றெழுமுன்பா லாணவங்கண் டன்றோ
செறிவித் துடலளவாச் செய்தே—மறியேறுங்

கையான் வினைப்போகங் காட்டிநுகர் வித்திடுமா
லையோ வறியா யகம். (௪)

விசாரணையி லெங்கே வியனுலக மென்றாய்
விசாரணையில் லாயென்முன் வேண்டி—விசாரணைசெய்
தாலன்றோ தோன்றுமுன தாபாஸ சித்தாந்த
மூலங்காண் சொன்னாய் முனிந்து. (௫)

நினைவுஜட மாகுங்கா ணின்னிலைமை யேதோ
நினைவே யனாத்துமென நேரும்—நினைவு
ஜடத்திரளி லொன்றாச் சமையுமேற் றானே
ஜடசித்தா மாறெவனீ சாற்று. (௬)

(இந்துவேத மேதென மறுத்தது.)

இந்துவே தம்போல வில்லைவே றோர்மறையென்
றுந்துமுனைக் காய்ந்தே யுரைத்தேமால்—சந்தமுற
* முன்னோ ரிடந்தன்னின் முற்றறிவி லாயீண்டு
மன்னமுறை யேசொல்வ மால். (௧)

வேதமுத லெக்கலையும் வேண்டியுரை செய்திடுமால்
பூதமுதல் யாவும் பொருளென்றே—தீதில்
பரிபாக நோக்கியே பல்லுயிர்க்கு மேன்மே
லருணலமுண் டாக வமர்ந்து. (௨)

பூத வுடல்கண்டு போகிப்பா னிப்புவன
சாதனமேற் றெந்நாளுஞ் சாற்றுமால்—தீதி
லுடலே பரமென்ன வுன்போன்றே யின்னு
முடனுவர் வேறுசில ரோது. (௩)

அன்னோர் காணுந்த மாக்கூறி யோரான்மாப்
பின்னே தெனலறியாய் பேசுவைநீ—பின்னேதிக்
கான்மாவன் றிச்சிவமு மாயுங்கா லென்றுணக்கேன்
றான்கன்ம ஞானங்க டாம். (௪)

ஆணவத்தி லாழ்ந்துழலு மான்மாவுக் கேகன்ம
மாணுமுயர் பத்திமுதல் வாய்க்குமால்—கோணுறுமஞ்
ஞானத்தா யுன்ஞான ஞானமோ நான்மறைசேர்
ஞானஞ் சிவஞான நாடு. (௫)

கன்மமுதன் மூன்றுமரன் கண்ணே யியற்றவுரை
நன்மறைகண் ஞானத்தை நாட்டுமோ—முன்னவனை

* (உக) வது பக்கம், (௪உ) முதல் (௪௫) வது பாடலீறாகக் கண்டுணர்க.

விட்டுப் பசுவிடத்தில் வேதாந்தப் போலியெனப்
பட்டாய்நீ யேயுன்னிப் பார். (சு)

ஞானமுத னன்குமெங்க ணுதன் பணிகண்டாய்
ஞானியோ நான்கினையு நாடுவனு—லூனமிலா
யோகி முதன்மூவ ரொவ்வொன்றை விட்டடைவார்
தேகிக்கு மேலறியாய் தேர். (எ)

சிறைப்பட்ட தேகிபரஞ் செல்லாமை யாலுன்
கறைப்பட்ட சித்தாந்தங் காணு—நிறைப்பட்ட
ஞானமுத னன்குமினி நாடாது விட்டகல்வா
யானபடி லோகா யதன். (அ)

தேவகுரு சொன்னுன் றியங்கலோ காயதமே
லாவதெனச் சொன்னு னசுரகுரு—மேவிடவே
மாயாவா தந்தன்னை மாண்டவறி வில்லாயுன்
மாயாவா தத்தை மற. (கூ)

எல்லாச் சமயத் தியல்புமிருந் தங்கங்கே
பொல்லா யறிந்தேபின் போற்றுவா—ரெல்லாமா
யல்லவுமா மெங்க ளதீதசித் தாந்தமதை
நல்லவர்மெய்ஞ் ஞான நயந்து. (க0)

புறச்சமயி நீயோ புகல்வாய் நிஷேத
முறக்கன்ம மாதிகளை யோகோ—மறப்பில்லா
ஞானி யெனப்பேசி நற்சரியையுஞ் செய்யா
யேனிருந்தாய் வீண்சுமையா வீங்கு. (கக)

வேதத்திற் கன்மமுதல் வேண்டியுனா செய்திடினும்
* பேதங்காண் சைவப் பெருநூலில்—வேதந்தான்
கன்மா திகளைக் கழறுமால் காரியமா
யுன்மா லகன்றிடவே யோர். (கஉ)

சைவத்திற் கூறுஞ் சரிதாதி நான்குமுயர்
தெய்வத்தை யேமெய்யாச் சேர்தரலான்—மைவைத்த
கண்டத்தா னேற்றருளுங் காமியமன் ருகவுவந்
தண்டத் தவர்போற்ற வார்ந்து. (கங)

* "சுருதிவழி யொழுகினர்கள் சுவர்க்கத்தார்" என்று உமாபதிசிவம் அருளிச்செய்தமையானும், "திகழ்தவள நீறுமரன் கண்மணியு மைந்தெழுத்துந் தேவர்போற்ற - மிகுபரம சிவலிங்கோ பாசனையும் வைதிகத்தில் விதித்துற் ருலு - மகமகிழு மாகமத்தின் படிமேலாந் தீக்கையடைந் தார்கட்கன்றிப்-புகலரு மானதக்கிரியா பாவனையுஞ் சிவனருளும் பொருந்திடாதே" என்று ஸ்ரீஹரதத்தாசாரியசுவாமிகள் விளக்கினமையானுங் கண்டறிக.

தெய்வமிலா நின்றனக்குத் தேரும் விழாப்பொலிவு
மெய்வழங்கி ஞயில்லை மேவிடவென்—றுய்வழியு
மில்லைகா ணின்றனக்கிங் கேனோ கெடுகின்றாய்
சொல்விரயஞ் செய்தே சுழன்று. (௧௪)

தேருந் திருநாளுந் தேடியொரு போதேனு
மீரமிலாய் போக விசைந்திலையால்—பாரமெனச்
செய்யாய் சிவபூசை சேர்வாய் பணந்தேடப்
பொய்யா விதென்னபிழைப் பு. (௧௫)

ஓன்றுமிலா ஞான முறைப்பா யுனதுமுகத்
தொன்றவே பூசுவதென் னெண்பொடியே—நன்றுமதை
யின்றுமுதற் பூசா திருப்பையே னன்றாங்காண்
வென்றியிலாய் சொன்னேன் விடு. (௧௬)

உன்பால்வே தாந்த முணர்வாரு நீயுமொரு
தன்மையா நீற்றெழிலைத் தாங்காம—லன்போடு
சேர்ந்தேகா லக்ஷேபஞ் செய்தாலன் றோநிலைக்குஞ்
சூர்ந்தேநீ கூறிவருங் கோள். (௧௭)

ஊன்விட்டார் தம்மை யுரைத்திடுவார் சைவரென
வானதினு ளும்விடுவ தாகாதென்—றேநினைந்தோ
வூனுதி யுண்ண லுனையா யுனைச்சேர்ந்தோர்க்
கீனமென நாளு மெடுத்து. (௧௮)

சரிதாதி நிந்தையிவண் சாற்றினு யென்னே
யொருபோது நீராடா யோகாண்—குருதானு
மில்லையோ வாங்கவனு மீதோ வறைந்திட்டான்
சொல்லையோ வந்திங்கே சூழ்ந்து. (௧௯)

பகவா னினைவிற் படரான்கா ணன்றோ
னகமாதி விட்டவிடத் தன்றே—சுகமாக
நிற்பா னறிவின்முன் னீங்கலா லாணவந்தான்
பிற்பா டறிந்தினிநீ பேசு. (௨௦)

நினைவு பலவற்றி னேர்ந்திடுமா லொன்று
தனையே பொருளென்ன றானு—நினைவோதா
னீங்காது தானேபின் னீக்கறியாய் நீதானு
நீங்கலெவன் முன்னே நிறுத்து. (௨௧)

சரியைக் கழற்றிமுதற் சாற்றியே பின்னுஞ்
சரிதாதி நான்குஞ்சா தித்தார்—பெரியோர்கா

ணந்தோ வவர்கருத்து மாகமத்தின் றன்கருத்தும்
வந்தோ திலையருடான் வாய்ந்து. (உஉ)

சரிதாதி நான்கினுக்குஞ் சாலோக மாதி
வருமா றெமக்களித்த வள்ளல்—குருராய
னென்றுரைத்தார் போதத்தி லென்னோ வெதிரானாய்
நன்றறியாய் வந்திங்கே நாடு. (உ௩)

சன்மார்க்க மேமுதலாத் தாதமார்க் கத்தளவுந்
தன்மார்க்க மானவெங்கள் சம்பந்தன்—றன்னைத்
துறவிமுத லாவுரைப்பே மென்றுசொற்றா ருண்மை
யறியகிலா யென்னோநின் னன்பு. (உ௪)

(சைவசித்தாந்தஞ் சாற்றிமகிழ்ந்தது.)

சைவமத சித்தாந்தஞ் சாற்றினை யுன்மயல்காண்
சைவமத மென்றதெவன் சாற்றிப்பின்—சைவமென
லீதென் றறியா யிசைத்தாய் சித்தாந்தமென
வோதும் பொருடெரியா துற்று. (க)

பசுபதிபா சத்தின் பகுப்புண்மை யாமால்
நிசவடிவா நாட்டுவமுன் னின்றே—பசுவாம்
அறிவென்ற நீதானே யாகுங்காண் பாச
மறியாமை யாகு மது. (உ)

அறிவுக்கெப் போது மறியாமை யின்றா
லறியாமை கொண்டதனு லந்தோ—வறிவோநீ
சுத்தவறி வாகுமான் சூழா தகற்றிடுமால்
பத்திசெய்வா யன்னோனெ பதி. (௩)

அறியாமை யேதென்பா யங்கீ கரிப்பம்
வெறியோநின் போதமிது வேண்டி—யறியாமை
நீக்கவே போதிப்பாய் நேடியே யார்யார்க்குந்
தீங்குரைப்பாய் கண்டாய் தெளி. (௪)

பிராந்தியென வேற்பாய் பிராந்தியென லார்க்கோ
பிராந்தி யெதனிடத்துப் பேதாய்—பிராந்தியஃ
தெப்படிமா றுயோதா னேதுகா ணப்பிராந்தி
யெப்படிமா றும்வந் திசை. (௫)

இல்லாப் பசுவாதி யேய்ந்தவா றெப்படிகா
ணில்லாமை கூறலெவ னேருமவை—நில்லா

நிலையா மவைமுன்னே நேர்வதெவன் சற்றே
யலையாம லிங்கே யறை. (சு)

கண்டிலன்யா னேனுமுனங் கண்டவரின் றேவென்னச்
சண்டனே சைவரெவர் சாற்றினர்—கண்டனையோ
நீதானு முன்னை நிறுத்துவையோ காட்டுவன்காண்
மாதாளும் பாகன் மகிழ்ந்து. (எ)

அறியும் பொருளு மறிவானு மொன்றே
வறிவிப்பான் றன்னை யகன்று—யறிபொருடா
னல்லவெனல் போல வறியாப் பொருளுந்தா
னல்லவெனற் கையமிலை யால். (அ)

எல்லாமா யல்லவுமா யென்னுமதன் வாய்மையுமக்
கெல்லாம் விளங்கிடுமோ வென்முன்னே—வல்லாய்போன்
றாத்தைவா யைத்திறந்தா யோகோ வறிவித்தேம்
* பார்த்திலையோ மேலே படித்து. (கூ)

ஏகமெனுஞ் சொற்பொருளை யெங்கே படித்தாய்காண்
மோகவிருண் மூழ்கி முதலில்லா—யேகமெனுஞ்
சொல்லின் பொருளதனைச் சொல்லுவேன் கண்டறிவாய்
நல்லோ ருரையை நவின்று. (கo)

"ஒன்றென்ற தொன்றேகா ணென்றே பதிபசுவா
மொன்றென்ற நீபாசத் தோடுளைகா—ணென்றின்று
லக்கரங்க ளின்றா மகா வுயிரின்றே
விக்கிரமத் தென்னு மிருக்கு." (கக)

என்னுந் திருவாக்கை யேனோ வுணர்ந்திலைசீர்
மன்னுஞ் சிவனடியார் மாட்டடைந்தே—துன்னு
மவர்தங்குற் றேவ லருளிருந்தா லாங்காண்
சுவரானு யென்முன்னே சூழ்ந்து. (கஉ)

ஒன்றல்ல வென்பதுதா னென்றலா லத்துவித
மன்றுபல வென்பதுதா னன்மாவன்—றென்று
முலகமுந் தானன்றென் றோர்கிலா யுள்ளே
கலகமேன் வந்ததுநீ காண். (கங)

இறைவ னிருப்பை யெடுத்திசைத்தேங் காண்முன் †
கறையுளா யுன்னிலைமை கண்டே—யறிவில்லா

* (ருடு) வது பக்கம், (கங) வது பாடலாற் காண்க.
† (ரு, கக) வது பாடல்களாற் காண்க.

னுன்போ லொருவ னுரைப்பா னிலையென்றே
யன்போ வவன்மே லறை. (கச)

மாயையா லிவ்வுலகம் வந்ததெனு மாமறைநீ
யாயகிலா தென்னோ வறைகின்றாய்—மேய
வணுசையோ கத்தா லகண்டமா மென்றே
யணுவறிவு மில்லா யகல். (கரு)

ஆயுங்கா னுட்பநுட்ப மாவதா லென்கண்டாய்
பேயனே நீயணுவைப் பேசுங்கா—னீயொருநல்
வித்தையே கற்றாய்காண் வேறெங்கே போகுமது
சத்தாகு மாயையன்றித் தான். (கசு)

மாயையென ஞானறியாய் மாயா விகாரங்காண்
மேயவுட லாதியிவை வேறாமா—னீயறியா
வாணவமாம் பேரிருளிங் காரறிவா ரெம்பெருமான்
காணவருள் செய்யானேல் கண்டு. (கஎ)

மாயையே சத்தியென்பாய் வல்லிருளிற் பட்டதனு
லாயவது மூலந்தா னாயிடுமால்—வேயுமைதோள்
பங்கனுல கத்தைப் படைக்குங்கான் * மண்போன்றே
பங்குடையா ளேசத்தி பார். (கஅ)

பங்குடையாள் சித்தாம் பரனில்வே றின்மையினு
லங்கதனுற் சிற்சத்தி யாயிடுமால்—சங்கரனில்
வேறாகு மாயை விளம்பாய் ஜடமென்றே
கூறுவர்காண் கண்டே குணம். (ககூ)

தாதான் மியமொன்று சாற்றுவார் சிற்சத்தி
மீதாம்பரிக்கிரக மேலொன்று—வேதாந்த
வித்தையிலே வல்லவர்கள் வேண்டியுரை செய்வார்கா
ணத்தைமா யாசத்தி யாய். (உ0)

"நங்கையினு னமணைத்துஞ் செய்வதுபோ னுடணைத்து
நங்கையினுற் செய்விக்கு நாயகனை"—யிங்கறிவீ
ரொன்றவுரை கேட்டா யிலைமாயை யென்பதுதா
னென்றுங் கரப்பொருளா யோர். (உக)

எல்லாஞ் சிவமயமே யென்றிடினு மீதறியா
யெல்லாம் பிரமமய மென்றாலும்—வல்லாய்போன்
றேசுவா யொன்றேகா † னேற்கும் பொருளொன்றோ
மாசுடையாய் வேறாய் மதி. (உஉ)

* கடாதி காரியங்களுக்கு. † மாயாவாதத்துக்கும், சைவத்துக்குமென வறிக.

பிரமஞ் சிவமென்னும் பேர்மாத் திரமோ
வருமுருத்தி ரப்பேரு மன்னும்—பரியாய
நாமங்க ளாயிடவே நாட்டுவமா லெம்பரனுக்
கோமுதலா யுள்ளபல வோர். (உரு)

* ஒன்றே பிரமமுள தோருங்கா லில்லையிரண்
டென்றே யுரைத்தபடி யேத்திடுமா—னன்றே
யுருத்திரப்பே ராலு முயர்மறைக ளெல்லா
மருத்தமிறி யாயினிதி னுய்ந்து. (உச)

அவன்:யமே தானாக வாயின யென்னத்
தவமில்லா யுன்றனையே சாற்றிற்—புவனிமிசை
யாயினையோ தானீ யவனுக்கு வேறின்றாய்
பேய்மதியாய் வந்திங்கே பேசு. (உரு)

† உள்ளதுமன் றில்லதுமன் றென்றும் பலவுந்தா
முள்ளும் படியன்றென் றோதின—ருள்ளசிவந்
தன்னைப் பெரியோரத் தன்மைவிரித் தோதினமால்
முன்னே யெடுத்து முடித்து. (உகூ)

உருவாதி மூன்றுமிவ னுண்டாங்கா னன்மா
வொருமூ வகைப்படியே யோது—மருள்விளைவே
யாக வவர்நோக்கி னல்லாது கூறவதற்
காகுமோ வம்மூன்று மால். (உஎ)

‡ "அன்றுந் திருவுருவங் காணதே யாட்பட்டே
னின்றுந் திருவுருவங் காண்கிலே—னென்றுந்தா
னெவ்வுருவோ னும்பிரா னென்பார்கட் கென்னுரைக்கே
னெவ்வுருவோ நின்னுருவ மேது." (உஅ)

அருள்வடிவ தாமூன்று மல்லாமல் வேறே
பொருளுண்டோ தானிப் புவியி—லிருள்வடிவா
மாயையெனக் கொள்ளற்க மாயா விளக்குடையாய்
மேயபரன் றன்மை விளம்பு. (உகூ)

எல்லாம் பரனுக்கிங் கேற்குமா லின்னருளே
யல்லாமல் வேறுளதோ வாயுங்கால்—சொல்வதெவ

* "ஏகமேவாத்விதீயம்ப்ரம்ஹா" என்பதும், "ஏகயேவ ருத்ரோ நத்விதீயா யதஸ்த்தே" என்பதுமாம்.

† (உஎ) வது பக்கம் (ச) வது பாடலானும், (சக) வது பக்கம் (கரு) வது பாடலானும் முறையே காண்க.

‡ காரைக்காலம்மையா ரருளிச்செய்தது.

னிப்படிய னிங்கிறத்த னிவ்வுருவ னென்றவனை
யொப்பவுயிர் தானே யுணர்ந்து. (கூ0)

* எம்மனோர் வாக்கியத்தை யேன்றிருடி னுய்காணுன்
சம்மதமெல் லாம்போச்சே தானவமாய்—பொய்ம்மதத்தாற்
சைவந் தனையிகழ்ந்தாய் சண்முகனு மெங்கள்குல
தெய்வந் தனைப்பணியாய் சேர்ந்து. (கூக)

உபாதியெனும் ரோதனமிற் றேடுங்கா ணெங்கள்
சபாபதிமுன் வீணே சலிப்பா—யுபாதியென
வெப்போதுங் கூறுகின்று யேற்போங்காண் சிற்கனமே
யொப்போதான் மாயா வுரு. (கூஉ)

கண்ணனுங் கண்ணுதலுங் காண்டீப னுமவனோ
டெண்ணுமொரு நால்வர்க்கு மெய்தவே—நண்ணியுளா
செய்தார் மாயாவாத சித்தியென்று யுன்னுசை
பொய்தான்பொய் தான்சுத்த பொய். (கூகூ)

கண்ணனுப மன்னியர்பாற் கண்டான் சிவநிலையை
நண்ணுமவர் போதத்தை நாடியே—யெண்ணுமுயர்
கீதையிலே கண்ணன் கிளத்தியது ஸோஹத்தா
லோதுங் கருடோஹ மொத்து. (கூச)

கண்ணன் சிவனடியான் கண்டா யறிவித்தேன்
கண்ணுதலோன் றன்னுண்மை காட்டினுன்—நண்ணு
மொருநால்வர்க் கன்றுலி னுற்றநிழற் கீழ்தா
னருநான் மறையந்த மார்ந்து. (கூரு)

வேதாந்தந் தாலே விளங்கிற்றே வுண்மைநிலை
வேதாந்த மூலம் விபரீதம்—போதாநின்
றையம் பெருகியதா லாய்ந்துரைத்தான் சித்தாந்த
மெய்யொன்ற வக்கணமே மேல். (கூசு)

சங்கானுர் சங்கிதையிற் சாற்றுங்கா ணிவ்வுண்மை
யெங்கறிவாய் நீதா னிருந்தவிட—மங்ககலாய்
மேலோ ரவைக்கண்ணே வேண்டியடைந் தாலன்றே
நூலோர் மதந்தெரியு நோற்று. (கூஎ)

வேதாந்த மென்றதுநின் வேதாந்த மன்றுங்காண்
மீதா முபநிடத மேவுமால்—நாதாந்தங்
காட்டுஞ்சித் தாந்தமெனல் கண்டாய் சிவாகமமே
யோட்டுங்காண் மாயா வுரு. (கூஅ)

* அருணகிரிநாதர் திருவாக்கு.

ஆகமாந் தத்தை யறைவதாற் சித்தாந்த
மாகவே தாந்தமினி யாயிடுமா—ஆகம்
பகரவே தான்பூர்வ பக்கமாய்ப் பாராய்
அகரமுந் தானறிகி லாய். (௩௯)

பண்டிதன்யா னென்றதிது போலப் பகர்ந்தாரோ
கண்டனைபோற் பேசுவதென் காட்டறியாய்—பண்டிதன்யா
னென்பாயுன் சித்தாந்த மேற்குமா லெப்பொருளு
முன்பாலே யோதுவதா லுற்று. (௪௦)

தேகவா தந்தனைச் செப்பினாய் சைவரிட
மோகமோ வான்மா முதலாங்காண்—ஆகெடுவாய்
* சத்தாஞ் சிவமல்ல தானசத்தாம் பாசமல
சத்தசத்தா மென்றறிநீ தான். (௪௧)

சத்தசத்தின் றம்முண்மை தானீ தெனவறியா
தத்தைக் குணமென்றா யார்கொள்வார்—பித்தா
அவியறிவு நீயென்றா னென்றுரைத்தா ரான்றோர்
வலியுண்டே லின்றென்முன் வா. (௪௨)

சரியைகிரி யாயோக சாதனங்க ளின்றி
யுரியசிவ ஞானந்தா னுண்டோ—சரியைமுத
லெல்லா முபகார மேற்பார் பெரியோர்தாம்
பொல்லாய்நிந் திப்பாய் புலர்ந்து. (௪௩)

ஞானியென வுன்னை நவில்கின்றாய் மற்றையரஞ்
ஞானிகளா மென்ன நகையாங்காண்—நானிலத்தி
லேசுவர்கா ணஞ்ஞானி யென்றே யனைவரையு
மேசுமதத் தோரங் கிரு. (௪௪)

புத்தா புலையேனைக் காவென்று பொங்கினர்காண்
தத்துவரா யப்பெயரார் தாமென்னே—பித்தோ
வருகா வடியேனைக் காவென் றறைந்தார்
முருகா வெனல்விட்டு முன். (௪௫)

ஏசுவெனுஞ் சொல்லு மெழினான் மறைமேவு
மீசனெனுஞ் சொல்லு மினிதொன்றாய்ப்—பேசவுனக்
கென்னோ கெடுமதிதா னென்செய்தாற் றீருமுனை
யன்னோ சகிப்பவர்தா மார். (௪௬)

* இவ்வுண்மை (௧௪) வது பக்கம், (௬௫) வது பாடலானும் போந்தவா றறிக.

ஏகான்ம வாதியுனக் கேனோதா னத்துவிதந்
தேகான்ம வாதிமகிழ் தேசிகனே—மோகாதி
கொண்டா யனைத்தையுநீ கொண்டதனு னீயேயாக்
கண்டா ரிகழ்ந்திடவே காண். (சஎ)

அத்துவிதத் தின்மேலு மாய்ந்தனைபோற் பேசமருள்
வித்தை படித்தனைகாண் வெவ்விடமே—யொத்தனையுன்
கத்தாம் பெருஞ்சத்தங் கண்டே யிகழுவரால்
சித்தாந்தச் செல்வர் சினந்து. (சஅ)

பூசையா லொன்றுமீ பொருளில்லை யென்றாயுன்
னுசையா லன்றே யதற்கழுவாய்—பூசனைபவிட்
டென்னே பழிக்கின்றா யெங்கள்சிவ நாமத்தைத்
தன்னே ரிலாமடமை தான். (சகூ)

மாதேவா சம்போகந் தாவென்ன மாட்டாயென்
மாதேவா சம்போகந் தாவென்பாய்—மூதேவி
யாயினைகா ணுன்னை யகலாள்கா ணுங்கவளுஞ்
சேயெனவே நாளுஞ் செறிந்து. (ருo)

கண்மூடிக் கொண்டதனுற் காணுமிங் காலாயுமென்
றெண்ணுமால் பூசையதை யெய்ந்தனைகாண்—மண்மாரி
யென்னவே போத மிசைத்திடலா வில்லையுல
கென்னவே பேரிருளி லேய்ந்து. (ருக)

நினைப்பு மறப்பேது நீண்மனமுந் தானே
தனைத்தெனலும் யாவோ வறையாய்—கனத்தவிரு
டன்னி லழுந்திடுவாய் தானும் பிரமத்தி
லென்னிதுகாண் மூட மியம்பு. (ருஉ)

சைவனாயோ நீயென்றாய் தானுகு மேட்டிலழுந்
தெய்வமிலாய் சீசீ சிரிப்பாங்காண்—செய்வதினி
யென்னே புகன்றிடுவா யேத்தினன் சைவனெனச்
சொன்னவிங் கார்கொள்வார் சொல். (ருங)

ஒழுவிலொடுக் கங்கண்டு முன்வாய் திறக்க
விழிவிலையோ தானிங் கிசையாய்—பழிபாவ
மஞ்சாய்வே தாந்த மறைந்தாய்சித் தாந்தத்தின்
விஞ்சுமென நெஞ்சில் விழைந்து. (ருச)

மேலே விளம்பினமால் வேதாந்த சித்தாந்த
நூலாய்ந் தறிந்திடவே நண்ணுணர்வோர்—மாலாரும்

பேயாகேள் வேதாந்தம் பேசுமுடல் சித்தாந்த
மாயா யுயிரொன் றகம். (௫௫)

வேதாந்த மாங்கனியின் வேருகாச் சித்தாந்த
போதமாஞ் சாரத்தைப் போகவிடா—தாதரவு
பட்டே நுகர்ந்திடுவார் பாரிற் பெரியோர்நீ
விட்டே யலைவதென்ன வீண். (௫௬)

இவ்வா றெடுத்தநுவா தஞ்செய் தகற்றினரா
லவ்வாத நூரு ணகன்றிடவே—செவ்வேதன்
சித்தாந்த மாஞ்சைவ சித்தாந்தங் காட்டியுயர்
சித்தாந்தி யார்தாஞ் சிரித்து. (௫எ)

சித்தாந்தத் தின்மேலோர் சித்தாந்த முண்டானுற்
சித்தாந்த மென்றிதனைச் செப்பலெவன்—சித்தாந்தங்
கண்டேன் கருணையினுற் காருமென வீழ்ந்தடியிற்
ருெண்டானு னன்ருேன் றுணிந்து. (௫அ)

போவிவே தாந்தத்தைப் போக்கினேன் புண்ணியமின்
ஞலியான் சீரொய்த லாயினேன்—வேலியென
நின்று யெனைத்தடுத்து நீணிலத்தி லிப்படியார்
வென்று ரொணமறுத்து மேல். (௫௯)

செய்வதெவன் கண்டாய் சிறியேன் பிழையனைத்து
மையனே நீயன்றி யார்தாஞே—வையகத்திற்
குற்றம்பா ராமற் குணமாகக் கொள்ளவல்லார்
மற்றிதற்குண் டோதான்கைம் மாறு. (௬0)

என்றே பலதரமு மேத்துவா னன்புநிலை
நன்றிருக்கு மேலா நலமோர்ந்தே—யன்றே
திருநோக்க மேமுதலாந் தீக்கையா லன்ஞேன்
கருவே ரறுத்தனரால் கண்டு. (௬௧)

வாழ்த்து.

சித்தாந்தம் வாழி சிவனு ரருள்வாழி
சித்தாந்தச் செல்வர் திறம்வாழி—சித்தாந்த
சாத்திரங்கள் வாழியெங்கள் சம்பந்த ரம்மைதிரி
நேத்திரரும் வாழி நிலத்து. (௬௨)

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஸம்பந்ததீர்த்த சரணாரவிந்தார்ப்பணமஸ்து.

சிவமயம்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ச | கூ | ங | காணு | கண்டு |
| சு | உ | உ | நிலமை | நிலைமை |
| அ | கச | ச | சத்தி | சத்தி |
| கூ | உஎ | க | யெல்லா | யெலா |
| க0 | ஙக | உ | மத்தை | மதை |
| கக | சக | ச | காய்ந்தவாா | காய்ந்தவரா |
| கச | சுஎ | உ | யோகா | யோகோ |
| கரு | ங | உ | மயமில் | மயவில் |
| கசு | உ | ங | றோா | தோா |
| ககூ | உச | ங | ணின்னுவர் | ணின்னுமவர் |
| ககூ | உன | ச | சேய் | செய் |
| உங | க0 | உ | செல் | சொல் |
| உகூ | கூ | ச | சு | கூ |
| ஙக | சு | ச | சு | சு |

## இனி அச்சிடும் புத்தகங்கள்.

பெரியபுராணம் (மூலமும், உரையும்.)
திருவிளையாடற்புராணம் „
பிரபுலிங்கலீலை விருத்தியுரை.
திருக்குதிரிசியவிவேக கண்டநம்.
ஸ்ரீநீலகண்ட விஜயம்.

திருச்சிற்றம்பலம்.